
ராணி முத்து
ராஜசியாமளா
பனித்துளி
சுடுவது ஏனோ?



## ராஜசியாமளா



# பனித்துளி சுடுவது ஏனோ?

**1**

உண்டு கொழுத்து நகர முடியாமல் படுத்துக் கிடக்கும் மலைப் பாம்பைப் போல் பாதை வளைந்து நெளிந்து மலையில் ஏறியது. பனி மூட்டத்தின் பின்னே நெடிய மரங்கள்— பல விதப் பச்சை நிறங்களில்— தேர்ந்த ஓவியனி

ஓவியம் போல் அசைவற்று நின்றன. கும்மென்ற மூலிகைச் செடிகளின் வாசம்; பனிக்காற்று... 'தம்' பிடித்தபடி பஸ் மெல்ல மேலேறிக்கொண்டிருந்தது.

கடிகாரம் பார்த்தாள் திரிநேத்ரா. 'இன்னும் அரை மணி நேரத்தில் குன்னூர் போய்ச் சேர்ந்துவிடலாம்.'

மனம் படபடத்தது. சூழலின் குளுமை இதமாக இல்லை. ஆயிரம் எண்ண ஓட்டம் அலைபாய– கவலை ரேகைகள் முகத்தில் கோலம் போட– வெளியே வெற்றுப் பார்வை பார்த்தபடி வந்தாள்.

போகுமிடத்தில் வேலை கிடைக்குமா? கிடைக்க வேண்டுமே கடவுளே! அவள் இப்போது இருக்கும் நிலையில் மாதம் இருபதாயிரம் என்பது எத்தகைய பெரிய தொகை? அம்மாவுக்கு ராஜ வைத்தியம் செய்யலாமே!

பத்து மணிக்கு அங்கு இருப்பதாகச் சொல்லி இருந்தாள்.

"பத்து மணிக்குள் குன்னூர் போயிடுவோமில்ல?"– பக்கத்தில் அமர்ந்திருந்த பெண்மணியிடம் மூன்றாம் தடவையாகக் கேட்டாள்.

அந்தப் பெண்மணி சிரித்துக்கொண்டாள்.

"போயிடலாம்மா. ஏன் இவ்வளவு படபடப்பா இருக்கே?"

சிரித்துச் சமாளித்தாள் திரிநேத்ரா.

அவளது சூழலை அந்நியரிடம் விளக்கவா முடியும்? ஆனால், வுன கனங்கள் மனதை மவுனமாய் வைப்பதில்லையே? ம்மாவை வேறு விட்டுவந்திருப்பது கவலை தந்தது. வேலை டைக்குமா என்ற எதிர்பார்ப்பு, நேரத்திற்குப் போய்ச் ர முடியுமா என்ற பதைப்பு... இதையெல்லாம் அந்தப் ண்மணியிடம் சொல்லிக்கொண்டு இருக்கவாமுடியும்?

வேலை கிடைத்துவிட்டால் அம்மாவை இங்கே அழைத்து ன்னோடு வைத்துவிடலாம். உடல்நிலை இதற்கு வாய்ப்பு டுக்குமா? முதலில் பந்தியில் இடம் கிடைக்கட்டும்... கிடைக்க



வேண்டும்... கிடைத்துவிட... வேண்டும்!

"குன்னூர் எல்லாம் இறங்குங்க"– நடத்துநரின் குரல் அவளைக் கலைத்தது.

"நீங்க சொன்ன 'மனோரஞ்சிதம் எஸ்டேட்' இதுதாம்மா. இதுக்கு மேல ஆட்டோவை விடமாட்டாங்க. இறங்கி, நடந்துதான் போகணும்."

இப்போது ஆட்டோ டிரைவருக்கு பேசிய பணத்தைக் கொடுத்துவிட்டு இறங்கிக்கொண்டாள் அவள். தோளில் மாட்டிய சிறு பை மட்டும்தான். கையில் கோப்பு, வேறு பொருள் என்று எதுவும் பெரிதாய் கிடையாது. அதனால், நீண்டு ஓடும் பாதையில் நடந்து– கம்பீரமாய் நிற்கும் பங்களாவை அடைவது சிரமமாய் இருக்காது. ஆனாலும், 'கேட்'டில் இருந்து வீட்டிற்கு– தப்பு, தப்பு... பங்களாவுக்கு பயங்கரத் தொலைவு இருக்கும் போல் தெரிந்தது.

'கேட்' மீது கை வைத்தவுடன்– "யாரு?" என்று கரிய பெரிய உருவம் திடீரென முளைத்து அதட்டலாய்க் கேட்க– ஒரு நொடி பயந்துபோனாள்.

"வே... வேலைக்கு..."

"ஓ! நீங்கதானா அது?"– அலட்சியமாய்க் கேட்டபடி கதவைத் திறந்துவிட்டான், காவலாளி. அருகேயே நாக்கைத் தொங்கப் போட்டபடி "வள்" என்று கடமையாற்றிய வேட்டை நாய்.

"நேரா இந்தப் பாதையில் போனீங்கன்னா பங்களா. சேகர்னு இருப்பாரு. சொன்னீங்கன்னா பெரிம்மாகிட்ட கூட்டிட்டுப் போவாரு"– நாயை இழுத்துப் பிடித்துக்கொண்டான்.

அவள் தலையாட்டிவிட்டு நடந்தாள். காடு போல் அடர்ந்த மரங்கள் சூழ்ந்து, பங்களாவோ அவற்றினூடே ஒளிந்துகொண்டிருந்தது. பனி மூட்டம் காரணமாய் காலை பத்து மணி என்பது எட்டு மணி போல் இருந்தது. ஆள் அரவமற்று அமைதி சூழ இருந்த இடத்தை மனதில் பதித்தபடி நடந்தாள்.

சென்னையின் காலை பத்து மணி வெயிலையும், தன் ஒண்டிக்குடித்தன வீட்டையும் இந்த இடத்தோடு ஒப்பிட்டபோது விநோதமாகப்பட்டது. வீடே இல்லாமல்... ஏன் ஒண்ட கை அகல இடம் கூட இல்லாமல்– பல ஏழை மக்கள் அவதிப்படும்போது– சிலர் மட்டும் எப்படித்தான் இத்தனை இடங்களை...

அவள் எண்ணம் முடியும் முன் வீடு வந்துவிட்டது. 'போர்டிகோ' படிகளில் ஒடிசலாய்– குச்சிக்கு சட்டை மாட்டியது போன்ற தோற்றத்தில் அவன் நின்றிருந்தான்.

'இவன்தான் சேகரா?'

"நான்...."

"வாட்ச்மேன் சொன்னான். உள்ளே வாங்க."

'அதற்குள் வாட்ச்மேன்? 'இன்டர்காம்' தொடர்பால் இருக்கும்'– நினைத்தவள், அவனைத் தொடர்ந்து உள்ளே போனாள். இரண்டு பெரிய திருமணங்களைச் செய்யும் அளவு பெரிய விஸ்தார அறை. அதைக் கடக்கும்போதே ஊதுவத்தி வாசமும், சந்தனம்– பூ மணமுமாய் பூஜை அறை தென்பட்டது.

அதனுள் போகாமல் கடந்து நடந்தால் விஸ்தாரமான கூடம். நடுவே– நடுநாயகமாய் ஊஞ்சலில் அமர்ந்து ஜெபமாலையை உருட்டிக்கொண்டிருந்தார் ஜானகியம்மா. பொட்டில்லாத நெற்றி என்றாலும் முகம் களையாய்– அமைதியாய் இருந்தது. சிலரைப் பார்த்தவுடன் கையெடுத்துக் கும்பிடத் தோன்றுமே... அப்படிப்பட்ட அமைப்பு. மனம் அழகாய் இருந்தால்தான் இப்படி முகம் ஜொலிக்குமோ என்று கூட தோன்றியது திரிநேத்ராவுக்கு.

இவர்கள் வந்த அரவம் கேட்டு கண்களை மலர்த்திய ஜானகியம்மா மெல்லப் புன்னகைத்து, "வாம்மா" என்றார். இவள் மெல்ல அருகே சென்றாள். ஊஞ்சலில் நகர்ந்து அவளுக்கு இடம் கொடுத்தபடி, "உட்காரும்மா" என்றார்.

அவள் தயங்கி, "பரவாயில்லை மேடம்" என்று இழுக்க,



சிரித்தார் ஜானகியம்மா. "மேடமா?" என்று மேலும் புன்னகை விஸ்தாரமானது.

இத்தனை சிரித்த முகமா? இவர்களுக்குக் கவலையே இருக்காதோ? ஆமாம், கவலைப்பட என்ன இருக்க முடியும்? எல்லாத்துக்கும் பணம் இருக்கிறதே! என்ன கவலை? அம்மாவின் மருத்துவச் செலவிற்காக கண்காணாத இடத்திற்கு தன்னைப் போல் வேலை தேடி வர வேண்டுமா? 'பணம் கிடைக்குமா, அம்மா உடல் தேறுமா?' என்பது போன்ற ஆயிரம் கவலைகள் இந்த அம்மாவிற்கு உண்டா?

"பேரு என்னம்மா சொல்லி இருந்தே?"

"திரிநேத்ரா"

"திரிநேத்ரா! மூணு கண்ணுடைய துர்கை பேரு. ரவுத்திர அம்சம். உனக்கும் ரொம்பக் கோபம் வருமோ?" சிரித்தபடிதான் கேட்டார்.

சட்டென்று உரைந்தாள் திரிநேத்ரா.

'திரிநேத்ரா. அதான் சிறுமை கண்டு பொங்கறியோ!'– ராஜின் குரல் மனதில் ஒலித்தது. தலை சிலுப்பி உலுக்கிக்கொண்டாள்.

"இல்லை மேடம்."

"நல்லது. வா" அந்தம்மாள் எழுந்து நடக்க, திரிநேத்ரா தொடர்ந்தாள். அலுவலக அறைக்கு அழைத்துப் போய் யார் முன்னாலோ நிறுத்தப் போகிறார் என்று அவள் நினைத்துக்கொண்டிருக்க, அந்தம்மாளோ அவளை உணவு அறைக்கு அழைத்துப் போனார்.

"உட்காரும்மா, முதல்ல சாப்பிடு."

"இ... இல்ல... வ... வந்து..."

"ஏழரை எட்டு மணிவாக்கில் கோயம்புத்தூர்ல பஸ் ஏறி இருப்பே. மணி இப்ப பத்து. ஏறும்போது எதுவும் சாப்பிட்டு இருக்கமாட்டே. முதல்ல சாப்பிடும்மா. அதுக்குள்ள என் பையனும் பேசிட்டிருக்கும் ஆளை அனுப்பிடுவான். இந்த

வீட்டுக்கு வரும் யாரும் பசியோட இருக்கக்கூடாது... நாங்க சாப்பிட்டாச்சு. நீ உட்காரும்மா."

திரிநேத்ரா அந்தம்மாளை மதிப்போடு பார்த்தாள். பொதுவாய் அவள் அறிந்தவரை பல பணக்காரர்கள் மனதில் ஈரம் என்பதே இருந்ததில்லை. அம்மாவின் மருத்துவச் செலவிற்காக பணக்கார உறவுகளை சந்தித்து எத்தனை அவமானங்களைச் சகித்திருக்கிறாள்?

"இங்க பாரு. இதய ஆபரேஷனுக்கெல்லாம் அதிக செலவாகும். உன் சக்திக்கு அப்பாற்பட்டது. ஏதோ இருக்கற வரை நல்லபடியா வெச்சிருந்து அனுப்பற வழியைப் பாரு. லட்சக்கணக்குல கடன் வாங்கிட்டு, நீ வாங்குற அஞ்சாயிரம் ரூபா சம்பளத்துல எப்படி, எப்போ நீ திருப்பித் தருவே! விரலுக்குத் தக்க வீக்கம் வேணும்மா."

பெற்றவளைக் காப்பாற்ற மகள் போராடுவது விரலுக்கு மீறிய வீக்கமா... ஆசையா?

இந்த அம்மாவோ வித்தியாசமாய் இருக்கிறார். கருணையாய் பேசுகிறார். மனம் நிறைந்தாலும்... வெற்று வயிறு கூப்பாடு போட, நாசூக்காய் உட்கார்ந்து– கூச்சத்தோடு சாப்பிடத் தொடங்கினாள். வெண்பொங்கலும், வடையும், சட்னியும் அந்த நேரத்திற்கு பசித்த வயிற்றுக்கு பரமசுகமாய் இருந்ததென்றால், நெய்யில் ஊறி கொட்டக் கொட்ட விழித்த முந்திரியும், மிளகு– சீரக காரமும் வாய்க்கு அமிர்தமாய் இருந்தது.

அவள் சாப்பிடும்போதே அருகே அமர்ந்து பேச்சுக் கொடுத்தார் ஜானகியம்மா.

"இன்னும் கல்யாணம் பண்ணிக்கலையாம்மா நீ?"– கேள்வி வலித்தது. ராஜின் முகம் சட்டென்று மனதில் முளைத்து மறைந்தது.

"இல்லம்மா. பி.ஏ. பி.எட். முடிச்சுட்டு தனியார் பள்ளிக்கூடத்தில் நான் வேலைக்குச் சேர்ந்த கொஞ்ச வருஷத்துலயே அம்மா உடம்பு முடியாம படுத்துட்டாங்க... இப்ப இதயநோய் வேற.



'ஆபரேஷன்' செய்யணும்..."

"அப்பா, கூடப் பிறந்தவங்க யாரும் இல்லையா?"

"அப்பா நான் சின்ன பொண்ணா இருந்தபோதே காலமாயிட்டார். அம்மாதான் சின்ன 'எக்ஸ்போர்ட்' கம்பெனியில தையல் வேலை செஞ்சு என்னைப் படிக்க வச்சாங்க. நான் என் பெத்தவங்களுக்கு ஒரே பொண்ணு."

"இப்ப அம்மாவைக் காப்பாத்தத்தான் இவ்வளவு தூரம் இந்த வேலை தேடி வந்திருக்கியா?"

அவள் தலையைக் குனிந்தபடி மெல்ல தலை அசைத்தாள்.

"நீ இந்த வேலையில் சேர்ந்தாலும் இருபதாயிரம்தானேம்மா சம்பளம். அதுல பணம் சேர்த்து எப்ப, எப்படிம்மா 'ஆபரேஷன்' செய்யப்போறே?"

'நீ வாங்குற அஞ்சாயிரம் ரூபா சம்பளத்துல லட்சக்கணக்குல கடன் வாங்கிட்டு எப்போ, எப்படி திருப்பித் தருவே?'

முகத்தில் அறையும் கேள்விகள். அவை போதாதென்று இந்த அம்மாவுக்கு இந்தக் கேள்வி அவசியமா? என்றுகூட எரிச்சலாய் வந்தது.

"என் தேவைகள் குறைவும்மா. சிக்கனமா இருந்து, என் சம்பளத்தைக் காட்டி வெளியில கொஞ்சம் கடன் வாங்கி எப்படியும் சமாளிச்சுடுவேன்."

அவள் தன்னம்பிக்கை பிடித்தது போல் அந்த அம்மாள் சிரித்துக்கொண்டார். அவள் கை கழுவி வர, அவரும் எழுந்துகொண்டார்.

"வா, என் மகளைப் பார்க்கலாம். உனக்கு பொறுமையும், பொறுப்பும் அதிகம் இருக்கு. என் பேத்தியைப் பார்த்துக்கிற வேலை உனக்கு நிச்சயம் கிடைச்சுடும்னு நினைக்கிறேன், வா."

ஜானகியம்மாவின் வார்த்தைகள் அவளுக்கு மிகுந்த தெம்பைக் கொடுத்தன. 'இந்த அம்மாளின் மகனுக்கு இதில் பாதியாவது கருணையும், இரக்கமும் இருக்காதா? வேலை

நிச்சயம் கிடைத்துவிடும்!' தெம்பாய் உள்ளே நுழைந்தவளுக்கு காத்திருந்தது அதிர்ச்சி!

"குரு" என்றபடி அந்தம்மாள் உள்ளே நுழைய- நிமிர்ந்து பார்த்த அவர் மகன்... இவளுடைய ராஜ்!

## 2

அந்த சந்திப்பு இருவருக்குமே எதிர்பாராத அதிர்ச்சிதான். சில நிமிடங்கள் பேச்சே வராமல் நிற்க, அவர்கள் நிலை புரியாமல் ஜானகியம்மா நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தார்.

சகஜமாக மகனிடம், "நம்ம மனோவைப் பார்த்துக்க வந்திருக்கிற டீச்சர்டா. இவங்க கூட பேசினதுல பழக்கவழக்கமெல்லாம் ஓ.கே. படிப்பு மத்த விஷயமெல்லாம் நீ பார்த்து சொல்லிட்டா, இவங்களையே நியமிச்சுடலாம்."

அம்மாவின் பேச்சு அவனை உலுக்கியது.

'இவளா? இவளையா தன் குழந்தைக்குத் தாதியாய், ஆசிரியையாய் நியமிக்கப் போகிறாள்?'

இவளும் கிட்டத்தட்ட அதே நிலையில்தான் இருந்தாள்.

'இவர் குழந்தையை கவனிக்கவா நான் இத்தனை தூரம் வந்தது. பணமும் வேண்டாம், ஒன்னும் வேண்டாம் என்று ஓடிவிடலாமா?'

மனமும், உடலும் ஓடத் துடித்தாலும்... அவள் கால்களை யாரோ அங்கேயே கட்டிப் போட்டது போல் அப்படியே நின்றாள்.

அப்படி ஓடிவிட்டால் யார் நல்ல சம்பளம் தரக் காத்திருக்கிறார்கள்? அம்மாவை எப்படி காப்பாற்றுவது?

அவன் சட்டென்று சுதாரித்தவனாக, பழசையெல்லாம்



"டேய் நீ எதிர்வீட்டு கமலாகூட விளையாடக்கூடாது."
"அப்பா மட்டும் கமலா வீட்டு வேலைக்காரியோடு தினம் விளையாடலாமா?"

– புரசை சிவம்.





"பையனுக்கு என்ன முகம் பூரா வெட்டுக்காயமா இருக்கு?"
"நீங்கதானே சார் முகவெட்டு உள்ள பையனா வேணும்னு கேட்டீங்க."

– சீர்காழி வி. ரேவதி.

"புதுத்தொடர் சீரியஸா இருக்கா... எப்படி?"
"இழுத்துக்கிட்டே இருக்கு."

– எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.



## புகழ்ச்சிதான் துன்பம்



"உங்களுக்கு அதிக துன்பம் தரக்கூடியது எது?" என்று தந்தை பெரியாரைக்கேட்க-"என்னை சரியாக புரிந்து கொள்ளாமல் என்னைப் போலித்தனமாகப் புகழ்வதுதான் எனக்குத் துன்பம் தரக் கூடியதாக இருக்கிறது" என்று சொன்னார், பெரியார்.

– க.சு.மணியன், பெரணமல்லூர்.

# தகவல் களம்

★ உலகில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட உலோகம் தாமிரம்.

★ அதிக சொற்களைக்கொண்ட மொழி ஆங்கிலம்.

★ தமிழ் மொழியில் நிறுத்தல் குறிகளை அறிமுகம் செய்தவர் இத்தாலிய அறிஞர் வீரமாமுனிவர்.

★ குத்துச்சண்டை வீரராக விளங்கிய அமெரிக்க குடியரசுத் தலைவர் வாசிங்டன்.

★ 1939–ல் மரணமடைந்த மன்னரின் சவத்துடன் அவருடைய 4 மனைவிகளும், 7 அடிமைப் பெண்களும் எரிக்கப்பட்டனர். அந்த மன்னரின் பெயர் ரஞ்சித் சிங்.

★ வெளிநாட்டு அறிஞர் மார்க்கோபோலோ மிகவும் விரும்பி இரு முறை வந்த பெருமைக்குரியது பாண்டிய நாடு.

★ சோழர்களின் கிராம ஆட்சியைப் பற்றி அறிந்துகொள்ள முக்கிய ஆதாரமாக இருப்பது செங்கல்பட்டு அருகில் உள்ள உத்திரமேரூர் கல்வெட்டு.

– பா.வரதன், கலவை.



முற்றுமாக துடைத்தெறிந்தது போல் இறுக்கத்துடன், "உட்காருங்க" என்றான்.

அவள் எதுவும் பேசாமல் அவன் எதிரே நாற்காலியில் அமர்ந்தாள். அவன் கையை நீட்ட– தன் கோப்பினை மவுனமாக அவளும் நீட்டினாள். அதைப் புரட்டிப் பார்த்தவன், மெல்ல நிமிர்ந்து அவளை ஆழமாகப் பார்த்தான். அந்தப் பார்வையின் தாக்கம் தாங்காமல் அவள் தனது பார்வையை தழைத்துக்கொண்டாள்.

"படிப்பு, பள்ளிக்கூட வேலை எல்லாம் சரி! ஆனா... தனிப்பட்ட முறையில் குழந்தையைப் பராமரிச்ச அனுபவம் எதுவும் இருக்கா?"

அவள் 'இல்லை' என்று தலையசைத்தாள்.

அவன் உதட்டைப் பிதுக்கினான். அவள் இதயம் படபடவென அடித்துக்கொண்டது. அவன் வேலை தரத் தயங்குவதாய்த் தோன்றியது. தன்னைப் பார்க்கும்போதெல்லாம்– உறுத்தப்போகும் மனசாட்சிக்கு பயப்படுகிறான் என்றே நினைத்தாள். தங்கள் பனிப்போர் காரணமாய் அம்மாவின் உயிரைப் பணயம் வைக்க முடியுமா?

'பிளீஸ், ராஜ். அதையெல்லாம் கெட்ட கனவாய் இருவரும் மறந்துவிடுவோம். எனக்கு இந்தப் பணம் ரொம்ப ரொம்பத் தேவை. வேலையைக் கொடுங்கள்' என்று தன்மானம் விட்டு கதறக்கூட தோன்றியது.

'பெரிய அடைப்பு இருக்கும்மா உங்க அம்மா இதயத்துல. எத்தனை சீக்கிரம் 'ஆபரேஷன்' செய்யறீங்களோ... அத்தனை நல்லது. அதுவரை அவங்க மாத்திரை தயவோட படுக்கையில ஓய்வா இருக்க வேண்டியதுதான்.'

டாக்டரின் வார்த்தைகளை அவளால் மறக்க முடியுமா?– இந்தச் சூழலில் தன் சுயநலம் காரணமாய் வருமானத்தை வேண்டாம் என்று கூற முடியுமா? அவனோ அவளது மனதைக் கீறி ரணப்படுத்துவதில் மும்முரமாய் இருந்தான்.

“உங்களுக்கு [illegible] ஏன்னா, அந்த குழந்தை வளர்ப்பு அனுப[illegible]டுக்குமே”- கேட்கும்போதே அவன் கண்களில் அத்தனை குரூரம் வழிந்தது.

அவள் கொதித்துப் போனாள். அந்தக் கொதிப்பு தீயாய் பார்வையில் வெளிப்பட்டது.

அந்தப் பார்வையை அதே வேகத்துடன் அவன் எதிர்கொண்டான். திரிநேத்ரா அவனது பார்வைக்கு ஈடுகொடுத்து கோபப் பார்வை பார்த்தாள்.

‘காதலித்த பாவத்திற்கு... உன்னையே நினைத்து உருகும் என்னிடம் கேட்கும் கேள்வியா இது? உன்னால் இப்படி கேட்க முடியும்! என்னைத் தவிக்கவிட்டு வேறு ஒருத்திக்கு தாலி கட்டியவன்தானே நீ’ மனம் குமுறியது. அருகில் ஜானகியம்மா இல்லாவிட்டால், மனதில் உள்ளதைக் கொட்டிக் கடித்துத் துப்பி இருப்பாள். ஆனால், அந்தம்மாளிடம் ஏற்பட்ட மரியாதை நிமித்தம் பொறுமை காத்தாள்.

இருந்தாலும் பளீச்சென்று பதிலடி கொடுப்பது போல், “நர்ஸ் வேலைக்கு வர்றவங்களுக்கு நோயாளியா இருந்த அனுபவம் உண்டான்னு கேட்பீங்க போலிருக்கே?” என்றாள், எகத்தாளமாக.

அவன் முகம் கன்றிச் சிவந்தாலும், அதைக் கவனிக்காமல் ஜானகியம்மா அவளுடைய பதிலை ரசித்துச் சிரித்தார்.

“நல்ல பதில்டா. எனக்கு என்னவோ இந்தப் பொண்ணு நல்லபடி நம்ம மனோவைப் பார்த்துப்பாள்னு தோணுது. நீ என்ன சொல்றே?”

தன் நிலை தெரியாமல் அம்மா அப்படிப் பேசியதில் அவன் கடுப்பாகிப் போனான்.

“நீங்களா முடிவெடுத்த பிறகு ஏன் என்கிட்ட கேட்கிறீங்க?” என்று வெடுவெடு என முணுமுணுத்தான்.

“அப்படி இல்லடா. உடம்பு முடியாத அம்மாவைக் காப்பாத்த இவ்வளவு தூரம் கிளம்பி வந்திருக்கா. பொறுப்பா நடந்துப்பா...”

“அது வேறயா...?”- அவன் ஆரம்பிக்க, மகனை அதற்கு மேல் பேசவிடாமல் தடுத்தபடி, “அம்மாடி திரிநேத்ரா, கொஞ்சம் வெளியே உட்கார்ந்திரு. குருகிட்ட பேசிட்டு உன்னைக் கூப்பிடுறேன்” என்றார்.

அந்த அம்மாவை இறைஞ்சுவது போல் பார்த்தபடி வெளியேறினாள்.

அவர் கடுகடுவென இருந்த மகனிடம் வாஞ்சையாய் சிரித்தபடி திரும்பினார். அம்மாவின் சிரித்த முகம் பார்த்தவுடன் அவன் இறுக்கம் சற்று தளரத்தான் செய்தது.

“எனக்கு இந்தப் பொண்ணைப் பிடிக்கலை” என்றான், அடம் பிடிக்கும் வகையில்.

சொல்லும்போதே மனம் வலித்தது. ஒருகாலத்தில் இந்தப் பெண்ணைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் பிடித்ததில்லை... இப்போது மோசக்காரி, பழிகாரி...

அவன் மனப் போராட்டம் புரியாமல் ஜானகியம்மா, “இங்க பாரு குரு, ஏற்கெனவே கிட்டத்தட்ட பத்து பேர் வந்தாங்க. படிப்பிருந்தா பண்பில்லை. பண்பிருந்தா சுத்தமில்லை. இப்படி ஒண்ணு இருந்தா இன்னொன்று இல்லை. இந்தப் பொண்ணுகிட்ட எல்லாம் இருக்கு...”

“வியாதிக்கார அம்மாவும் இருக்கா.”

“மனுஷங்கன்னா நோய் வரும்தான். நம்ம ‘டிரஸ்ட்’ மூலம் பணம் கொடுத்து ஆபரேஷனுக்கு ஏற்பாடு செஞ்சுடலாம். அம்மா பத்தின கவலை இல்லாம இந்தப் பொண்ணும் இங்கே நம்ம மனோவை கவனிச்சுப்பா, சரியா? எல்லாம் சரியா இருக்குப்பா. ஏன் இன்னும் யோசிக்கற?”

அவனுக்கு இந்தச் சூழலிலும் சிரிப்பு வந்தது. நேத்ரா பற்றிய அத்தனை நல்ல விஷயங்களையும் தன் அம்மாவிடம் பட்டியலிட்டு, ‘இன்னும் என்னம்மா யோசனை. கல்யாணத்துக்கு சம்மதிம்மா’

என்று தான் கெஞ்ச நினைத்ததெல்லாம் போக, இப்போது அம்மா அவளுக்காக– அவள் வேலைக்காக– தன்னிடம் கெஞ்சுகிறார்! என்ன விநோதம்?

"அவகிட்ட என்ன குறை சொல்லு. ஏதாவது ஒண்ணு சொன்னாலும் போதும். நான் அவளை அனுப்பிடறேன்."

'என் நேத்ராவிடம் குறையா? என்னால் சொல்ல முடியுமா?' அவன் தடுமாறிப் போனான்.

"அவளை வேலையில சேர்த்துப்போம். ஒரு மாசம் பார்ப்போம். சரிபடலைன்னா அனுப்பிடலாம். சரியா...?"

"என்னவோ செய்யுங்க" என்றான்.

மகனுக்கு விருப்பமில்லை என்றால் இந்த வார்த்தைகள்கூட வராது. விடாப்பிடியாய் நிற்பான் என்பது அந்த தாய்க்குத் தெரியும்.

நேத்ரா உள்ளே அழைக்கப்பட்டாள். விதிமுறைகள் விளக்கப்பட்டன. அவள் சம்மதித்தாள்.

"விஷயம் புரிஞ்சுதா? அம்மாவுக்காக சம்மதிக்கிறேன். ம்... மனோவை அதிகம் அதட்டக்கூடாது... தண்டிப்பு, கண்டிப்பு எல்லாம் அளவோடு இருக்கட்டும்."

அவள் வெட்டுவது போல் அவனைப் பார்த்தாள்.

"அப்புறம்... உங்க அம்மாவை ஆஸ்பத்திரியே பார்த்துக்கும். ஒரு நர்ஸ் கூடவே தனியா இருக்க ஏற்பாடு செஞ்சுடறேன். இங்கே மனோ மட்டுமே உங்க கவனமா இருக்கணும்."

"கண்டிப்பா"– இந்தப் பதிலை மனமாற– நெஞ்சு நிறைய நன்றியுடன் சொன்னாள். கூடவே தன்மானம் தந்த, "அம்மாவுக்கான செலவை கொஞ்சம் கொஞ்சமா அடைச்சுடறேன்" என்றாள் மென் குரலில், ஜானகியம்மாவைப் பார்த்தபடி.

அவர் வழக்கம்போல் புன்னகைத்தபடி, "ஏழைகளுக்கு மருத்துவம், படிப்பு, கல்யாணம்னு உதவிகள் செய்ய என் கணவர் பேர்ல ஒரு 'டிரஸ்ட்' வெச்சிருக்கோம். எஸ்டேட், தொழிற்சாலை,



கம்பெனின்னு எல்லாத்திலும் இருந்து வரும் வருமானத்தில் அஞ்சு சதவீதத்தை இதுக்காக செலவிடறோம். அதனால, அந்தப் பணத்தை நீ திருப்பிக் கொடுக்கணும்னு இல்லை. எங்க தாயில்லா மனோவை இன்னொரு தாயா இருந்து நீ பார்த்துக்கிட்டாப் போதும். சரியா...?" என்றார் கனிவாக.

"ஆமாம், அது ரொம்ப முக்கியம்" என்று இடைபுகுந்த குருராஜ், அவளை ஆழமாகப் பார்த்தபடி– "உங்க குடும்பம், குழந்தை, குட்டி, கணவர்னு அடிக்கடி ஓடக்கூடாது. புரியுதா?" என்றான், கண்டிப்புக் குரலில்.

அவனை முறைத்தவள், "அதுக்கான அவசியம் கிடையாது. எனக்குக் கல்யாணமே நடக்கலை. எனக்கான ஒரே உறவு– அன்னைக்கும், இன்னைக்கும் எங்க அம்மாதான்" என்றாள் கறாராக.

அதே வேகத்தில் அவனும், "அப்படியா? பணம் காரணமா கல்யாணம் நின்னிருந்தா அதுக்கும் எங்க 'டிரஸ்ட்'ல இருந்து உதவி செய்யறோம். நல்லபடி செஞ்சுக்கோங்க" என்றான் கேலியாக.

அவனை எரித்துவிடுவது போல் பார்த்த பார்வையில் நிஜமாகவே திரிபுரம் எரித்த துர்க்கையாய் நின்றாள் அவள்.

ஜானகியம்மாவே அந்தப் பார்வை வீச்சில் ஆடித்தான் போனார்!

## 3

குழந்தை மனோ ரஞ்சனி பனியில் செய்து வைத்த பொம்மை போல் இருந்தாள். பாட்டியின் பின்னே ஒளிந்துகொண்டு பூமொட்டுத் தலையை மட்டும் வெளியே நீட்டி, இவளைப் பார்த்தாள்.

திரிநேத்ராவும் முகம் மலர சிரித்தாள்.

..."மா" என்றாள்.

அது நிமிர்ந்து அப்படியே தன் பாட்டியைப் பார்த்தது.

"போடா, இது உன் புது டீச்சரம்மா. உன்கூடவே இருந்து உன்னைப் பார்த்துப்பாங்க."

குழந்தைக்கு மூன்று வயதுதான் இருக்கும். பாட்டி சொன்னதில் டீச்சர் என்பது புரிந்ததோ... இல்லையோ! அம்மா என்ற வார்த்தை அதன் நினைவை எங்கோ மீட்டிருக்க வேண்டும்.

சட்டென்று மலர்ந்தது. பாட்டியின் பின்புறத்தில் இருந்து மெல்ல வெளியே வந்தது. ஆனாலும், உடனே ஓடிப்போய் அவள் கைகளுக்குள் தஞ்சம் புகவில்லை. பாட்டியின் முந்தானையைத் திருகிக்கொண்டே நின்றது.

திரிநேத்ரா முன்னால் பாய்ந்து அவளை இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

"அம்மா மாதிரி என்னைப் பார்த்துப்பியா?"– குழந்தை மழலையில் கேட்க– ஜானகியம்மாவின் கண்கள் பனித்தன.

முத்தமொன்றை அதன் கன்னத்தில் பதித்த திரிநேத்ரா, "கண்டிப்பாடா" என்றாள்.

"அம்மா மாதிரி பாதியிலேயே என்னை விட்டுப் போயிடமாட்டியே?" என்ற அடுத்தக் கேள்வியில் நேத்ராவே கலங்கிவிட்டாள். ஜானகியம்மா விசும்பியேவிட்டார்.

"நிச்சயம் மாட்டேன்டா குட்டி" என்று அதனை இறுக்கி அணைத்தவள், அப்போதுதான் மாடிப்படி ஓரத்தில் இவற்றைப் பார்த்தபடி 'சரட்'டென்று விலகிய குருவைப் பார்த்தாள்.

தன்னையே உலுக்கிய கேள்வி அவனை எவ்வளவு பாதித்திருக்கும் என்று எண்ணும்போது அவன் மீது ஏற்பட்டிருந்த கோபத்தையும் மீறி பச்சாதாபம் எழுந்தது.

தன்னைக் கைவிட்டு அவன் வேறொரு பெண்ணை மணந்தபோதுகூட அவள் மறந்தும் அவன் மனைவியை இழந்து



வருந்தவேண்டும் என்று சபிக்கவில்லை!

ஏன் அவனுக்கு இந்த இளம் வயதில் இப்படியொரு சோதனை! கல்லூரி நாட்களில் மற்றவருக்கு உதவிய உயரிய குணம் இன்னும் அப்படித்தானே இருக்கிறது. தன் அம்மா விஷயத்தில் அவன் காட்டிய கருணை எத்தனை பெரியது?

இரு தினங்களுக்கு முன்தான் சென்னை சென்றிருந்தாள். வேலை கொடுத்த அன்று மாலையே குருராஜ் அவளிடம் சொல்லிவிட்டான்.

'உங்க அம்மாவை கோவையில் சேர்க்க ஏற்பாடு செஞ்சுட்டேன். நீங்க சென்னை போய் உடமைகளை எடுத்துக்கிட்டு கிளம்பிடுங்க. கார்ல போயிட்டு கார்ல வந்துடலாம். உங்க அம்மாவை கோவைக்கு கூட்டி வர 'ஆம்புலன்ஸ்' ஏற்பாடு பண்ணிட்டேன். கூடவே ஒரு நர்ஸ் வருவாங்க. நீங்களே வழியில அவங்களை 'அட்மிட்' பண்ணிட்டு குன்னூர் வந்துடுங்க. அதுக்குப் பிறகு 'ஆபரேஷன்' அன்னைக்கு மட்டும் உங்க அம்மாவைப் போய்ப் பார்க்கலாம். என்ன சரியா?'

எல்லாவற்றையும் தீர்மானித்துவிட்டு கறாராய்ப் பேசும் இவனிடம் எதிர்த்து என்ன சொல்ல முடியும்? ஓட்டலில் ஒரு ஐஸ்கிரீம் 'ஆர்டர்' செய்ய வேண்டும் என்றால் கூட நூறு முறை இவளுடைய விருப்பத்தைக் கேட்டு நின்ற இவள் காதலன் ராஜ் இல்லை இது. முதலாளி குருராஜ்! இவ்வளவு தூரம் அவன் உதவுவதே பெரிய விஷயமல்லவா!

'சரி.'

'நீங்க சென்னை போய்த் திரும்பின பிறகே குழந்தை உங்களை சந்திக்கட்டும்னு சொல்லி இருக்கேன். ஏன்னா... அறிமுகமான உடனே பிரிஞ்சு போறது... அந்த வலியை பெரியவங்க தாங்கிக்கலாம். குழந்தைகளால் முடியாது. ஏற்கனவே அம்மாவைப்...பி...பிரிஞ்சு வாடறா...'

அதற்கு மேல் பேச முடியாமல் எழுந்து போய்விட்டான்.

போறது…', 'அந்த வலியை பெரியவங்க தாங்கிக்கலாம்' என்று சொல்லும்போதுதான் என்ன அழுத்தம்! குரலில் மட்டுமா? பார்வையில் என்ன வன்மம்! அப்பப்பா…!

ஆனால், அவன் குழந்தை விஷயத்தில் சொன்னது சரியாகத்தான் பட்டது. 'இப்போ என்னைப் பிரிஞ்சு போயிடமாட்டியே?' என்று குழந்தை கேட்கிறாளே! இவளைச் சந்தித்த உடனேயே சென்னை சென்றிருந்தால் இந்தப் பூ வாடி அல்லவா போயிருக்கும்?

இப்போது குழந்தைக்கு நிம்மதி. குழந்தைக்கு மட்டுமா? தனக்கும்தானே! இங்கே நேர்காணலுக்கு வரும்முன் தன் அப்பாவை பக்கத்து வீட்டு பானு பராமரிப்பில் விட்டுவிட்டு வந்திருந்தாள்.

"ரெண்டே நாள். 'இன்டர்வியூ'வை முடிச்சிட்டு வந்துடறேன் பானு. அதுவரை அம்மாவைப் பார்த்துக்கிட்டாப் போதும்."

"தாராளமாய் பார்த்துக்கறேன், நேத்ரா. நீ கவலைப்படாமப் போயிட்டு வா. என்ன, எண்ணெய்– தேங்காயெல்லாம் இல்லாத பத்தியச் சாப்பாடு. ராத்திரி துணைக்கு அவங்கக்கூட படுக்கணும், அவ்வளவுதானே?"

இதைச் செய்ய அவள் மாமியாரிடம் லேசில் அனுமதி கிடைக்காது. நேத்ராவிற்கே அது தெரியும். அதனால், நேராக அவள் மாமியாரிடமே போய்– முதலில் அவரிடமே அனுமதி பெறுவது போல் பேசி, அவரை 'உங்களை மாதிரி உண்டா?' என்று முகத்துதி செய்து…

சொன்னபடி வேலை தேடிக்கொண்டு வந்தவள்– அம்மாவை எப்படி எங்கு விடுவது என்றெல்லாம் அல்லாட அவசியமே இல்லாத வகையில் குருராஜ் எல்லா ஏற்பாட்டையும் அழகாகச் செய்துவிட்டான்! பணமும், வசதியும் இருந்தால் எல்லாம் சுலபம்தான். ஆனால், மனமும் இருக்க வேண்டும்! அது இந்தக் குடும்பத்தில் இருப்பதால்தான், அம்மாவை நல்லபடியாக



மருத்துவமனையில் சேர்த்துவிட்டு நிம்மதியாக அவளால் குன்னூர் வர முடிந்தது.

அம்மாவிடம் எல்லாம் சொன்னபோது ஆச்சரியப்பட்டுப் போனாள். ராஜை தனக்கு முன்பே தெரியும் என்பதையும் காதல் ரணங்களையும் மட்டும் மறைத்துவிட்டாள்.

"உன் நல்ல மனசுக்கு எல்லாம் நல்லபடி நடக்கும் நேத்ரா" என்றாள் அந்த ஏழைத்தாய், மகளை மனமாற வாழ்த்தியபடி.

'இருபத்தைந்து வயதில் மற்ற பெண்கள் எல்லாம் தொங்கத் தொங்க தாலி சகிதம்– கையிலும், வயிற்றிலும் குழந்தையுடன் வளைய வரும்போது இவள் மட்டும் இப்படி தனக்காக மன்றாடிக்கொண்டு நிற்கிறாளே?' என்ற ஆதங்கம் அவர் மனம் முழுவதும் துக்கமாய் நிரம்பி இருந்தது.

தனக்குச் சரியானவுடன் இத்தனை கருணை காட்டும் முதலாளியம்மா மூலமாவது தன் மகளுக்கு திருமணத்தை நடத்திவிட முடியாதா என்ற நப்பாசை இந்த அம்மாளின் மனதில் வேர்விட்டது. 'ஏதோ கடவுள் கண் திறக்கிறானே!'

மருத்துவமனையில் அம்மாவின் ஆம்புலன்சும், இவள் காரும் நுழைந்தபோது அசந்துதான் போனார்கள் இருவருமே. ஏதோ 'டிரஸ்ட்' மூலம் உதவி செய்வதால் சிறிய மருத்துவமனையாக இருக்கும் என்றுதான் நினைத்தார்கள். ஆனால், ஐந்து நட்சத்திர ஓட்டல் போல் இருக்கும் இன்றைய பிரமாண்ட மருத்துவமனைகளுள் அதுவும் ஒன்றாய் நின்றதில் வாயடைத்துப் போனார்கள்.

"இவ்வளவு தூரம் உனக்கு உதவி செய்யற உன் முதலாளி வீட்டுக்கு நீ ரொம்ப உண்மையா இருக்கணும், நேத்ரா. என் 'ஆபரேஷன்' அன்னிக்குக்கூட நீ முடிஞ்சா வந்தாப் போதும். பெரிய ஆஸ்பத்திரி, நர்சுன்னு என்னை கவனிச்சுக்க எல்லாரும் இருக்கும்போது என்ன கவலை? எனக்குப் புதுசா தெம்பு கூடிப் போச்சு. நான் நல்லபடி பிழைச்சு வந்து உன் கல்யாணத்தை

நடத்திடுவேன். இப்ப நீ கிளம்பு" என்று அவள் அம்மாவே அவளிடம் தெம்பாய்ப் பேச– நேத்ராவிற்கு அதிக நிம்மதியாய் இருந்தது.

தனக்கு நிம்மதி கொடுத்த ஜானகியம்மா குடும்பத்திற்கு தன்னால் நல்லது நடக்க வேண்டும் என்று மனமாற நினைத்தாள். குழந்தையைப் பார்த்த நொடி முதல் அதன் வளர்ச்சி மட்டுமே தன் வாழ்வின் குறிக்கோள் என்று மனதில் உரு ஏற்றிக்கொண்டாள். குழந்தையும் அவளிடம் சட்டென்று ஒட்டிக்கொண்டது.

அதனோடு விளையாடி, குளிப்பாட்டி, சோறூட்டி, சின்ன பாட்டுகளைச் சொல்லிக் கொடுத்துவிட்டு இப்போதுதான் தூங்கச் செய்தாள்.

குழந்தை தூங்கியவுடன் இவளுக்குத் தூக்கம் வந்துவிடுமா? யாரை மறக்க நினைத்தாளோ, யாரை சந்திக்கவே கூடாது என நினைத்தாளோ... அவன் வீட்டிலேயே வந்து...

அய்யோ.... விதி ஏன் இப்படி விளையாடுகிறது?

எண்ணத்தில் இருந்து மீண்டு வர– கையில் ஒரு புத்தகத்தை எடுத்தவள், அப்படியே சன்னமான ஒலியில் வானொலியை இயக்கினாள். அது உருகி உருகிப் பாடிக்கொண்டிருந்தது.

*"நெஞ்சே நெஞ்சே நீ எங்கே–*
*நானும் அங்கே! என் வாழ்வும் அங்கே!*
*அன்பே அன்பே நான் இங்கே–*
*தேகம் இங்கே! என் ஜீவன் எங்கே!*
*என் நதியே என் கண்முன்னே வற்றிப் போனாய்*
*வான் மழையாக எனைத்தேடி மண்ணில் வந்தாய்*
*என் தாகங்கள் தீர்க்காமல் கடலில் ஏன் சேர்கிறாய்?"*

–கண்மூடி அந்தப் பாடலில் லயித்தவள், வாரிச் சுருட்டி எழும்படி பளிச்சென வானொலி அணைக்கப்பட்டது.

எதிரே குருராஜ் நின்றுகொண்டிருந்தான். முகத்தில்



அனலடித்தது.

"குழந்தையைப் பக்கத்துல வச்சுக்கிட்டு கேட்கும் பாடலா இது? இன்னொரு முறை நான் சொல்லும்படி வச்சுக்காதீங்க. அப்புறம் நடக்கறதே வேற."

நடையில் கோபம் தெரிய– விருட்டென வெளியே விரைந்தான்.

அவள் அதிர்ந்து– சிலையாய் அமர்ந்துவிட்டாள்.

## 4

நேராக மகள் அறையில் இருந்து தன் அறைக்கு வந்து கட்டிலில் விழுந்தான் குருராஜ். அப்பாடல் வரிகளே அவன் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டிருந்தன.

*'என் நதியே என் கண் முன்னே வற்றிப் போனாய்*
*வான் மழையாக எனைத்தேடி மண்ணில் வந்தாய்*
*என் தாகங்கள் தீர்க்காமல் கடலில் ஏன் சேர்கிறாய்?'*

– அவன் கண்ணோரம் கரகரவென கண்ணீர் வழிந்தது.

ஆண் அழக்கூடாது என்ற தன்மானத்தை விட்டுவிட்டு அழுதான்.

*ஏன், ஏன் என் காதல் நதியே வற்றிப் போனாய்?*
*என் தாகம் தீர்க்கப் போவதில்லை.*
*பின் ஏன் மீண்டும் மழையாகப் பொழிகிறாய்?*
*ஏனடி, என் இனிய ராட்சசியே!*

– கண்களைத் துடைத்துக்கொண்டான்.

அப்படி எளிதாக எண்ணங்களைத் துடைத்தெறிய முடிவதில்லையே! அவளைச் சந்தித்த அந்த ஆனந்தப் பொழுதுகளில் போய் மனக்குதிரை நின்றது. கடிவாளத்தைப் பிடிக்க முடியாமல் அவனும் விட்டுவிட்டான்– அதன் போக்கில்!

அப்போது எம்.பி.ஏ. படித்துக்கொண்டிருந்தான். அதன் ஒ
அங்கமாய் 'புராஜெக்ட்' செய்ய சென்னையில் சில மாதங்கள் தங்
நேர்ந்தது. தன் பெரியம்மா வீட்டில் தங்கினான். பெரியம்மா
அம்மாவின் சொந்த சகோதரி. பெரியப்பா ஐ.ஏ.எஸ். அதிகாரி
அவர் மகனும், மருமகளும் ஐ.டி. நிறுவன உயர் அதிகாரிகள். மக
அனு கல்லூரி மாணவி. அம்மா வழக்கம்போல் குன்னூரில்தா
இருந்தார். அப்பாவோ சென்னை, கோவை, குன்னூர் என்
வியாபார நிமித்தம் பறந்துகொண்டிருப்பார்.

பெரியம்மா வீட்டிலும் பணச் செழுமைக்குக் குறைவில்லை
தங்கை மகன் என்பதால் மட்டுமல்ல... சிறுவயது முதலே
சுட்டியாய் இருப்பதால் குரு மீது சுந்தரியம்மாளுக்கு பிரியம் உண்டு
அதனால் அவனை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினார்கள் அந்
வீட்டினர். தனியாய் வளர்ந்த குருராஜீக்கும்– பெரியம்மா வீட்டில்
அவர் மகன், மகள், மருமகள் என்ற சற்றே பெரிய வட்டம்– தனக்கு
சகோதரன், சகோதரி, அண்ணி முறையில் கிடைக்க– இயல்பாய்
ஒன்றிப்போனான். எல்லோரையும்விட சகோதரன் முரளியின்
ஆறு வயது மகன் ராகுல் அதிகமாகவே ஒட்டிக்கொண்டான்
சிறு விஷயத்திற்காக அந்தச் சிறுவன் முகம் வாடினால்கூட
குருவால் பொறுக்க முடியாது என்ற அளவில் ஆகிவிட்டான்.

அன்று பள்ளிக்கூடத்தில் இருந்து திரும்பும்போதே ராகுல்
வாடிய முகத்துடன் இருந்தான். பாட்டி கேட்டபோது கூட
சரியாக எதுவும் சொல்லாதவன், குரு வந்தவுடன் ஓடிப்போய்
அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழாத குறையாய்– 'சித்தப்பா
சித்தப்பா! எங்க புது மிஸ் இல்ல, என்னை 'பேட் பாய்'னு
திட்டிட்டாங்க சித்தப்பா."

சுந்தரியம்மாளுக்குசிரிப்புவந்துவிட்டது. "ஆமாம், இதுக்குத்தான்
அப்போலேருந்து 'உம்'முன்னு உட்கார்ந்திருந்தியா?"

ஆனால், குரு சீரியசாக குழந்தையின் குமுறலை
செவிமடுத்தான்.



"நீ என்னம்மா செஞ்சே?"

"பக்கத்துப் பையன் என் ஸ்கேலை எடுத்தான். நான் திட்டினேன். மிஸ் என்னைத் திட்டிட்டாங்க."

கொழுகொழு கன்னம் அதிர, குண்டு திராட்சைக் கண்கள் உருள– அதில் கண்ணீர் குளம் கட்டி, மூக்கு நுனி சிவக்க, உதடு துடித்துச் சொல்லும் சிறுவனின் சின்னப் பிரச்சினை அவன் மனதைத் தொட்டது.

"அப்படியா விஷயம். நாளைக்கே நான் அந்த மிஸ்ஸை என்ன சேதின்னு கேட்கறேன், போதுமா? நீ அழாதடா கண்ணா."

"பிராமிஸ்?"– சிறுவன் கை நீட்டினான்.

"பிராமிஸ்."

உணவு மேசையில் உணவை எடுத்து வைத்துக்கொண்டிருந்த ராகுலின் அம்மா செல்வி, "குரு, இவன் லேசுப்பட்டவன் இல்லை. இவன் சொல்றதைக் கேட்டுக்கிட்டு டீச்சரைப் போய் பார்த்துக்கிட்டு இருக்காதே" என்றாள்.

"இல்ல, அண்ணி. குழந்தை இவ்வளவு 'பீல்' பண்ணறான். என்னன்னு கேட்டுடலாம்."

மறுநாள் மதியம் குழந்தையின் பள்ளிக்கூடத்தில் போய் நின்றான் குருராஜ். ராகுலின் வகுப்பாசிரியரை பிலுபிலுவென பிடித்துக்கொண்டான். ஆசிரியர் விழித்தார்.

"ராகுலை நான் திட்டினேனா?" என்று புருவம் சுருக்கி ஆச்சரியம் காட்டிய அவன் வகுப்பாசிரியர் சட்டென நினைவு வந்தவராக, "நான் மதியம் ஒரு அவர் 'பெர்மிஷன்'ல போயிட்டேன். அப்ப வேறு வாத்யார் போட்டிருப்பாங்க. அதாவது, பி.எட். பயிற்சி டீச்சர் சில பேர் இப்ப ஆறு, ஏழாம் வகுப்புக்கு பாடம் எடுக்கறாங்க. அவங்கள்ல ஒருத்தர் வகுப்பில் இருந்திருக்கும்போது ராகுலைத் திட்டி இருக்கலாம்."

"கூப்பிடுங்க அவங்களை."

தீபா டீச்சர் விட்டால்போதும் என்று 'ஸ்டாப் ரூமை' நோக்கிப் போனார். அடுத்த நொடி அவன் முன் நேத்ரா வந்து நின்றாள்.

'பி.எட். கூட முடிக்காத கத்துக்குட்டியா என் ராகுலைத் திட்டுவது? வரட்டும் ஒரு வழி செய்கிறேன்' என்று காத்திருந்தவன் உண்மையில் நேத்ராவைப் பார்த்தவுடன், தான் ஒரு வழியானான். வார்த்தை வராமல் பேச்சற்று நின்றவன். சுதாரிக்க ஒரு நொடி பிடித்தது. என்ன பேசுவது? ஏது பேசுவது?

"நீ... நீங்க..."– தடுமாறினான்.

'இந்த அழகுப் பதுமை வானலோகத்து தேவதையோ?'

அவள் தெளிவாய் இருந்தாள்.

"நான் திரிநேத்ரா. நேத்து ராகுல் ரொம்ப சேட்டை பண்ணினான். அதான் திட்டினேன்."

ராகுல் பெயரைக் கேட்டவுடன்தான் ஒருமாதிரி தன் உணர்வைத் திரும்ப பெற்றான் குருராஜ்.

"அவன் ஸ்கேலை இன்னொரு பையன் எடுத்துக்கிட்டான். இவன் திரும்பக் கேட்டிருக்கான். அது தப்பா?"

"கேட்ட விதம் தப்பு. அந்தப் பையன் கையைக் கடிச்சுட்டான், ராகுல்."

"ஓ!"– குரு இதை எதிர்பார்க்கவில்லை.

"இன்னொரு விஷயம். ஆசிரியர்களுக்கு மாணவர்களை அடிக்கணும், தண்டிக்கணும்னு வேண்டுதல் கிடையாது. குழந்தைங்க தப்பு செய்யும்போது நாங்க கண்டிக்க வேண்டியது எங்க கடமை. கடமையைச் செய்யவிடாம உங்களைப் போன்ற பெற்றோர் தடுக்கும்போது அதனால பாதிக்கப்படறது உங்க குழந்தைகள்தானே தவிர நாங்க இல்லை... புரியுதா?"

அவன் பேச்சே வராமல் தலையாட்டினான். என்ன சொன்னாள் என்பதே உரைக்காத உணர்வு. "நான் பயிற்சிக்காக



இங்கே சில மாசம் இருக்கப் போறேன். அவ்வளவுதான். அதுவும் உங்க பையன் வகுப்பு எனக்கு 'ரெகுலரா' கிடையாது."

அவள் கடுப்பாய் முடித்துக்கொள்ள– "சாரி, அவன் கடிச்ச விஷயம் தெரியாது. கண்டிக்கிறேன்" என்றான்.

அவள் விருட்டென நகர முயல, "ஒரு நிமிஷம்" என்று நிறுத்தினான்.

"என்ன?"

"உங்க பேரு என்ன சொன்னீங்க?"

"திரிநேத்ரா."

"திரிநேத்ரா! துர்க்கை பேரு. அதான் 'சிறுமை கண்டு பொங்குவாய்'னு இப்படி படபடன்னு பாயறீங்களோ?"

அவள் முறைத்துவிட்டு விலக, அவளையே பார்த்தபடி நின்றான் அவன். உதட்டோரம் சிரிப்பு பூத்தது.

"நான் சொல்லலை? இவனை நம்பிப் போய் மூக்கொடைபட்டு வந்திருக்கே."

அண்ணி சொல்ல– எல்லோரும் சிரிக்க– தலைகுனிந்து சிரித்துக்கொண்டான். அந்த வெட்கச் சிரிப்பு மூக்கு உடைப்பட்டதற்காக அல்ல. உடைத்த தேவதையை சந்தித்ததற்காக என்பது பாவம் இவர்களுக்கு எப்படித் தெரியும்?

இரண்டு தினங்கள் அவள் நினைவாகவே அலைந்தான். அவளைப் பற்றி அதிகம் அறியத் துடித்தான்.

ராகுலை இழுத்துப் பிடித்து, "அப்புறம் அந்த மிஸ் ஏதாவது திட்டினாங்களாடா?" என்று அவளைப் பற்றி அறியும் ஆவலில் கேட்டான்.

குழந்தை உதட்டைப் பிதுக்கினான். "அப்படி என்ன திட்டினே? அந்த மிஸ் அப்புறம் எங்க வகுப்புக்கே வரலை. எங்க தீபா மிஸ்தான் வர்றாங்க" என்றது, மழலையில்.

அவனுக்குச் சப்பிட்டுப் போனது. குழந்தை பள்ளிக்கூட

பேருந்திலேயே போய் வருவதால், அதை கூட்டி வரும் சாக்கு வைத்துக்கூட அவன் பள்ளிக்கூடப் பக்கம் போ முடியவில்லை.

தவித்துக்கொண்டு இருந்தவனுக்குக் கடவுளே கருணை காட்டுவது போல் அவன் கண்ணில் அன்று பட்டாள் அவள்

நண்பர்களுடன் சினிமா போகலாம் என்று திடீரெ முடிவெடுத்தவன், தியேட்டரில் போய் நின்றான். 'டிக்கெ கவுன்டர்' அருகே அவளைப் பார்த்துவிட்டான். விடுவானா ஆண்கள் பக்கம் அவ்வளவு கும்பல் இல்லாவிட்டாலும அவளருகே போய் "ஹலோ" என்றான்.

ஒருநொடி அடையாளம் தெரியாதவளாய் முழித்தவள், சட்டென நினைவு வந்தவளாய், "ஹ...ஹலோ" என்றாள்.

"ஒரு சின்ன உதவி. ஆண்கள் பக்கம் கொஞ்சம் கும்பல் அதிகமா இருக்கு. எங்களுக்கும் சேர்த்து 'டிக்கெட்' எடுக்க முடியுமா?" பணத்தை நீட்டினான்.

இவன் எப்படிப்பட்டவன் என்று கண்களால் அளப்பவள் போல் பார்த்தவள், முதலில் தயங்கினாள். ஆண்கள் பக்கம் ஒன்றும் அதிக கும்பல் இல்லை. ஆனால், பள்ளி மாணவனிட அப்பா. என்ன பெரிதாக தவறு செய்துவிடப் போகிறான் என் எண்ணமும் தோன்றியது. குடும்பத்தோடதானே வந்திருக்க போகிறான்!

அதற்குள் கவுன்டரின் உள்ளே இருந்து, "என்னம்மா எவ்வளவு ரூபா டிக்கெட்?" என்று குரல் வர, அவசரமாய் இவ பணத்தையும் பெற்றுக்கொண்டாள்.

"எங்களுக்கு மூணு டிக்கெட்" என்றான் அவன் அவசரமா

அவள் உள்ளே– "ரெண்டு பிளஸ் மூணு டிக்கெட்" என்றா ஒரு நொடி குழம்பிய தியேட்டர் ஊழியர், "அஞ்சு டிக்கெட்டு சொல்லிட்டுப் போங்களேன்மா" என்று ஒன்றாய் டிக்கெட்டை அச்சடித்துக் கொடுத்தார்.

"கடவுளே!" மேலே ஒன்றும் சொல்ல முடியாமல் டிக்கெட்டை பெற்றுக்கொண்டாள்.

உள்ளே மனம் விசிலடித்தாலும் வெளியே அப்பாவியா முகத்தை வைத்தபடி, "அச்சச்சோ, ஒண்ணாவே போட்டு கொடுத்துட்டாங்களா?" என்றபடி டிக்கெட்டை வாங்கிக்கொண்டான்.

"வாங்க" என்று முன்னே நடக்க– இவளும், தோழியும் நாய்க்குட்டியாய் தொடர்ந்தார்கள்.

"உங்க குடும்பம் எங்கே?"

அவனுடன் இரு ஆண்கள் சேர்ந்துகொள்ள, "குடும்பமா நண்பர்கள் கூட வந்திருக்கேன். இது ஜான். இவன் ரகு" என்று அறிமுகம் வேறு செய்துவைத்தான்.

திரிநேத்ராவுடன் வந்த தோழி வாணி, தலையில் அடித்துக்கொண்டு முறைத்தாள். 'உன் தப்பு. என்னவோ செஞ்சிக்கோ' என்பது போல் அவள் போய் ஓர இருக்கையில் போய் உட்கார்ந்துவிட– வேறு வழியின்றி திரிநேத்ரா அடுத்த இருக்கையில் அமர்ந்தாள். காத்திருந்தவன் போல் அவளருகே தாவி உட்கார்ந்தான் குரு.

"எங்க பி.எட். பண்ணுறீங்க?"

சொன்னாள் ஒரே வார்த்தையில்தான் பதில். அவனா விடுவான்? ஒரு வாரம் அவளுக்காக அலைபாய்ந்தது அவன் அல்லவா!

"அப்பா என்ன பண்ணுறார்?"

"இல்லை."

"என்ன?"

"எப்பவோ போயிட்டார்."

"ஓ... ஐம் சாரி."

"அவர் போனதுக்காக இப்ப நான் வருத்தப்படலை.



ஆனா, இப்படி பக்கத்துல உட்கார்ந்து படம் பார்க்கவிடாம செய்யறீங்களே, அதுக்கு வருத்தப்படறேன்."

"ஓ! படம் இன்னும் போடலையே?"

"நான் என் தோழியோடு வந்திருக்கேன்."

"நல்லது, என்னையும் உங்க தோழனா ஏத்துக்கலாம்."

"அய்யோ" அவள் குரல் உயர்ந்தது. "ஏதோ மாணவனோட அப்பாங்கற மரியாதையில பேசினா, என்ன அதிகமாய்ப் போறீங்க? ராகுலோட அம்மாகிட்ட 'உங்க கணவர் போக்கு சரியில்லை'ன்னு சொல்ல நிமிஷம் ஆகாது மிஸ்டர்..." ஓடும் விளம்பரத்தையும் மீறி ஒலித்தது அவள் குரல்.

முன் இருக்கைக்காரர்கள் எல்லாம் திரும்பிப் பார்க்க– "குரு, என்னடா இது?" என்றார்கள், அவன் நண்பர்கள்.

"அதானே... என்ன நேத்ரா இது?"– அவன் சீரியசாய்க் கேட்க, அவள் சற்றே அடங்கினாள்.

அவன் பொருட்படுத்தாமல், "என் குடும்பத்துல குழப்பத்தை ஏற்படுத்தி இருப்பே!" என்றான்.

"அந்த பயம் இருக்கட்டும்"– அவள் அமர்த்தலாய் பேசினாள்.

"நான் ஏன் பயப்படணும்?"

"மனைவிகிட்டக்கூட பயம் கிடையாதா?"

"உன்கிட்டயா?"

"ஏய், என்ன பேசறீங்க?" என்றவள் சற்றே முன்பக்கம் சாய்ந்து– "இது சரிப்படாது" என்றபடி அவன் நண்பர்களை நோக்கி, "ராகுலோட அம்மா நம்பர் என்ன?" என்று கேட்டாள்.

"ஐயயோ வேண்டாங்க" என்று அலறினான்.

"இப்பத்தானே பெண்டாட்டிகிட்ட பயம் கிடையாதுன்னு சொன்னீங்க."

"உங்களைப் பார்த்தா அழகா இருக்கிங்க. பயப்படற மாதிரி இல்லை."

அவள் பற்களைக் கடித்தாள். "பைத்தியமா நீ. உன் பெண்டாட்டி ராகுலோட அம்மா பத்தி பேசினா, சம்பந்தமில்லாம என்னை இழுக்கற."

பாசாங்காய் குழம்பியது போல் பார்த்த குருராஜ், அவளிடம் சிரியசாய்–

"ராகுலோட அம்மாகிட்ட ராகுலோட அப்பா– அதாவது எங்க அண்ணன்தானே பயப்படணும். நான் ஏன் பயப்படணும்?"

அவள் சற்றே நிதானித்தாள்.

"அப்ப ராகுலோட அப்பா...?"

"நான் இல்லை. என்னைப் பார்த்தா ஆறு வயசு பையனுக்கு அப்பா மாதிரியாத் தெரியுது? நான் எம்.பி.ஏ. பண்ணிட்டிருக்கேன்."

அவன் அப்பாவியாய் முகத்தை வைத்துக்கொண்டு சொல்ல, இவள் நாக்கைக் கடித்து தன் தலையில் தட்டிக்கொண்டாள்.

"'ஐ'ம் சாரி."

"இட்ஸ் ஓ.கே. படம் போட்டுட்டான் பாருங்க. அதுக்கு வேற என்னைத் திட்டுவீங்க."

அவள் முகம் சிவக்க, "சாரி... சாரி... வெரி சாரி" என்றாள்.

மறுநாள் பள்ளிக்கூட இடைவேளையின்போது அவன் வந்து நிற்பான் என்று நினைக்கவில்லை.

சற்றே பதற்றத்தோடு, "என்ன விஷயம்?" என்றாள்.

"ஒரு சின்ன உதவி."

"ம்..."

"வீட்டுக்கு வந்து ராகுலுக்கு கொஞ்சம் 'டியூஷன்' சொல்லிக் கொடுக்க முடியுமா?"



அவள் ஆழமாகப் பார்த்தாள். அவளது எண்ணத்தைப் புரிந்துகொண்டவன் போல், "இல்ல... இந்த ஸ்கூல் டீச்சர்ஸ் யாரும் 'ஹோம் டியூஷன்' வெச்சுக்கக் கூடாதுன்னு சட்டம். நீங்க இந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர் இல்லை. ராகுல் கொஞ்சம் விளையாட்டுத்தனமா இருக்கான். அண்ணிக்கு ஐ.டி.யில் வேலை. 'குழந்தையோடு அதிக நேரம் செலவிட முடியலை. சொல்லிக் கொடுக்க முடியலை'ன்னு வருந்தினாங்க... அதான் உங்களைக் கேட்கலாம்னு..."

அவன் சற்று யோசித்த பின், "சரி, சாயங்காலம் ஒரு மணி நேரம் வந்து பாடம் எடுக்கறேன். ஐநூறு ரூபாய். சரியா?"

"ஆயிரமாகவே வாங்கிக்கங்க" என்றவன், முகம் மலர விலகினான்.

சற்று தூரத்தில் இருந்து இதைக் கவனித்துக்கொண்டிருந்த வாணி, "என்ன... நீயும் விழுந்துட்டியா?"

"என்ன?"

"அவன் கண் பூரா காதல் வழியுது. 'மனைவிக்கு பயப்படமாட்டேன். நீ பயப்படும்படியாக இல்லை. அழகா இருக்கே'ன்னு நேத்தே மறைமுகமா தன் மனசை வெளிப்படுத்திட்டான். புரிஞ்சும் புரியாம நடிக்கிறியா, இல்ல நீயும் காதல்ல விழுந்துட்டியா?"

பெருமூச்சை இழுத்து விட்டபடி மரத்தடியில் அப்படியே உட்கார்ந்தாள், திரிநேத்ரா.

"என் சூழல் உனக்குத் தெரியாதா வாணி?"

"அதனாலதான் கேட்கறேன். ஏன் இந்த டியூஷனை ஏத்துக்கறே?"

"காசு வருதுன்னு ஏத்துக்கறேன். நேர்மையா பாடம் சொல்லிக் கொடுத்து வாங்கப் போற காசுதான். தப்பில்லை. எங்க அம்மா வாங்கற சொற்ப சம்பளத்துல சக்திக்கு மீறி கடன் வாங்கி என்னை

பி.எட். படிப்புல வேற சேர்த்துட்டாங்க. வீட்டு வாடகை, மளிகை, என் படிப்பு, கடன்னு செலவாயிடுது. அம்மாவுக்கு 'சுகர்' இருக்கு. ஆறு மாசமா 'டெஸ்ட்' பண்ணிக்காம, மாத்திரைகூட சாப்பிடாம இருக்காங்க... இந்த 'டியூஷன்' பணம் அதுக்காவது பயன்படுமில்ல!"

வாணியால் எதுவும் பேச முடியவில்லை.

"வேலைக்குப் போய் எங்க அம்மாவை நல்லபடி வெச்சுக்கணும். அதுதான் இப்போதைக்கு என் ஒரே குறிக்கோள். வேலைக்குப் போய் சம்பாதிக்கறதுக்குள்ள– நானே டியூஷன் எடுத்து கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம்னுதான் நினைச்சேன்... இந்தச் சூழல்ல எந்த மன்மதன் வந்தாலும் நான் விழமாட்டேன்."

அவள் கணக்கும், கடவுள் எழுதும் எழுத்தும் ஒன்றாகவா இருக்கும்?

## 5

**அ**வன் பெரியம்மா, அவ்வப்போது பார்வையில் தட்டுப்படும் அவன் அண்ணி, வீடு நிறைய வேலையாட்கள் என்று சூழல் இதமாகவே இருந்தது, திரிநேத்ராவிற்கு. அவன் மட்டும் வீட்டில் இருந்துகொண்டு முறை தவறி நடந்துவிடுவானோ என்ற பயத்திற்கு இடமில்லாமல் போனது.

'டியூஷன்' போவது பழகிப் போனது.

ஆனால், முதல் இரு தினங்கள் அறையின் ஓரமாக அவனும் அமர்ந்தபோது சற்றே நெளிந்தாள். நாசூக்காக, "ராகுலை நான் பார்த்துக்கறேன்" என்றாள்.

"இல்ல, வகுப்பில் நீங்க அவனை அதட்டினதால கொஞ்ம் பயப்படறான். அதனால் சில நாட்கள் உங்கக்கூட அவன் இயல்பாய் பழகும்வரை நான் இங்கே இருக்கேனே?"



அவள் அரைமனதாய்ச் சம்மதித்தாள்.

அவளை டியூஷனுக்காக அந்த வீட்டிற்கு வரவழைக்க அவன் எவ்வளவு போராட வேண்டியது இருந்தது!

வீட்டில், "ஒண்ணாம் வகுப்பு பையனுக்கு டியூஷனா?" என்றார்கள்.

"ஐயயோ! எந்தக் காலத்துல இருக்கீங்க? இப்பல்லாம் எல்.கே.ஜி.யிலே டியூஷன் ஆரம்பிச்சுடறாங்க... அப்பத்தானே போகப்போக அதிக மார்க் வாங்க முடியும்."

"போடா. நீ சொல்லிக்கொடு. இல்ல அனு சொல்லிக்..."

"ஐய, நமக்கெல்லாம் எங்கண்ணா நேரம் இருக்கு? அனு பாவம். காலேஜ் போயிட்டு வரவே சரியா இருக்கும்..."

அப்படி இப்படி பேசி– பெரியவங்களை சம்மதிக்க வைத்தான். ஆனால், நேத்ராவைப் பார்த்தவுடன் ராகுல் உள்ளே ஓடினான். அதை காட்டிக்கொள்ளாமல், அவளை பெரியம்மாவுக்கு அறிமுகம் செய்துவிட்டு அவள் காப்பி குடிக்கும் நேரம் சப்தமில்லாமல் போய் ராகுலை சரிகட்டி...

"நான் இருக்கும்போது அந்த மிஸ் ஏதாவது செஞ்சுடுவாங்களா என்ன?"

"அப்ப நீயும் கூடவே இருப்பியா?"

"கண்டிப்பாடா."

அதையே காரணம் காட்டி ஒரு மணி நேரம் தெய்வ தரிசனம் போல் அவளைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து...

திரிநேத்ராவிற்கே சங்கடமாகிப் போனது. பணத்திற்காக அவனது ஆசைக்கு தூபம் போடுகிறோமோ என்ற குற்ற உணர்வு. அவன் எதுவும் பேசாமல் இருக்கும்போது, தானாகப் போய் எப்படி என்னவென்று சொல்வது? நான் உன்னைக் காதலிக்கும் சூழலில் இல்லை என்பதா?

'நான் உன்னைக் காதலிப்பதாய் யார் சொன்னது?' என்று அவன் திருப்பிக் கேட்டுவிட்டால்... உன் காதலைக் காட்டிக்கொடுக்க

உன் பார்வை ஒன்றே போதும் என்பதா?

மெல்ல மெல்ல அந்தப் பார்வையில் அவளே கரைந்தபோதுதான் அவள் பயம் அதிகரிக்கத் தொடங்கியது.

அவளும் சிறு பெண்தானே. மிகச் சிறு வயது முதலே ஆசைகளை அடக்கியே பழகியவள்தான். ஒரு பட்டுப் பாவாடை, நகை, அறுசுவை உணவு என்று எதையுமே தன் அம்மாவிடம் கேட்டதில்லை. அவையும் இவளை நாடியதில்லை. ஜடப்பொருட்கள். மெல்ல... ஒரு நாள் சம்பாதித்து, காசு சேர்த்து மெதுவாக பார்த்துக்கொள்ளலாம் என்றுதான் இருந்தாள்.

குருராஜ் விஷயம் அப்படியா? அவனே விரும்பி வந்து அவளை– அவளது வைராக்கியத்தை அசைக்கிறான். அவள் என்ன முற்றும் துறந்தவளா? ஆசைகளை அறுத்தவளா? ஆனால், அவள் என்ன சம்பாதித்து உயர்ந்தாலும், எந்த நாளும் அவனை எட்ட முடியாது. அந்த உண்மை அவளுக்கு நன்றாக உரைத்தது. அதனால் மனதை இறுக்கியே வைத்து– ஒரு கர்மயோகி போல் பாடம் நடத்துவதும், வேறு எந்த வார்த்தையும் அநாவசியமாகப் பேசாமல் வீடு திரும்புவதுமாக இருந்தாள்.

அப்படியே இருந்துவிட முடியுமா? அவளால் முடிந்தாலும் அவனால்...?

மழை இருட்டுக் கட்டிய மாலை நேரம். வழக்கம்போல் அவனது வீட்டிற்குள் நுழைந்தாள். ஆனால், சூழல் சற்று வித்தியாசமாய் இருந்தது. சமையல்கார அம்மாளைத் தவிர யாரும் கண்ணில் படவில்லை. மெல்ல படிப்பு அறைக்குள் போனபோது அவன் மட்டும் சாய்வு நாற்காலியில் ஆடியபடி புத்தகம் படித்துக்கொண்டு இருந்தான். 'திரும்பிவிடலாமா?' என்ற தயக்கத்தோடு அவனிடம் கேட்டாள்–

"ராகுல்?"

நிமிர்ந்தவன், "உட்காருங்க" என்றான்.

அவள் சங்கடமாய் உணர்ந்தாலும், அதைக் காட்டிக்கொள்ளாமல் உட்கார்ந்தாள். அதற்குள் சமையல்கார அம்மாள் காப்பி கொண்டு



கொடுத்துவிட்டுப் போனாள்.

"குழந்தை இல்லையா?"

"இல்ல. ஒரு பிறந்தநாள் விருந்து. தன் அப்பா–அம்மாவோடு போயிருக்கான். பெரியப்பா– பெரியம்மா ஒரு கல்யாணத்துக்குப் போயிருக்காங்க."

"போன்ல சொல்லி இருக்கலாமே?" கேட்டவள்– அவசரமாய் காப்பியைப் பருகினாள்.

"போன்ல சொல்ற விஷயமில்லை இது?"

அவள் மனம் அதிர்ந்தது. 'என்ன சொல்ல வருகிறான்?'

"என்ன?"

"நேத்ரா, நாம ரெண்டு பேருமே கண்ணாமூச்சி ஆடறோம்னு நினைக்கறேன்."

நேரடியாய், எதிர்பார்க்காத நேரம்– அவன் பேச்சைத் தொடங்கியதால் அவள் தடுமாறிப் போனாள்.

"சரி, நேரடியா நான் சொல்லிட்றேன். எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு. உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா?"

அவள் மிரண்டுதான் போனாள். 'என்ன இது? இப்படிக் கேட்கிறானே?'

அவள் ஒருமாதிரி எதிர்பார்த்ததுதான். ஆனால், எதிர்பாராத நேரம்... எதிர்பாராதவிதம்...

அவள் தயங்கவே– அவனே தொடர்ந்தான். "உடனே சொல்லணும்னு இல்ல. மெதுவா யோசிச்சு பதில் சொல்லுங்க. ஆனா, எனக்கு சாதகமா சொல்லுங்க, பிளீஸ்."

'இன்றல்ல' என்று கேட்டாலும், தன்னால் அவனுக்குச் சாதகமாக பதில் சொல்ல முடியப்போகிறதா? அவன் உயரம் எட்ட எத்தனை எம்பினாலும் தன்னால் ஆகப்போகிறதில்லை. அவன் பெரியப்பா ஐ.ஏ.எஸ். அதிகாரி. அவர் மருமகள், கமிஷனரின் மகள். வேலையில் கைநிறைய சம்பளம். இவர்கள் வீட்டுப் பெண் அனுவிற்குப் பார்த்திருப்பது ஆடிட்டர் மகனான டாக்டர் வரன்.

நுங்கம்பாக்கத்தில் பாதித் தெருக்கள் அவர்களுக்குச் சொந்தம் என்று பேசிக்கொள்கிறார்கள்... உறவினர்களே இத்தனை உயரம். குருராஜ் வீட்டிலோ கேட்கவே வேண்டாம். பெரிய தொழிலதிபரின் ஒரே மகன். பல நிறுவனங்களின் வருங்கால முதலாளி...

பெரியப்பா தன் சம்பந்தியாய் கமிஷனரையும், ஆடிட்டரையும் காட்டும்போது– குருராஜ் அப்பா யாரைக் காட்டமுடியும்? தினக்கூலியின் மகள் என்ற அறிமுகம் அவளுக்கே சங்கடமாய் இருந்தது. தன் அம்மா அவளுக்கு உசத்திதான். ஆனால், மற்றவர் முன் ஏன் மட்டமாய் பார்க்கப்பட வேண்டும்? அவர்கள் உயரம் அவர்களுக்கு. இவள் கீழ் மட்டத்திலேயே நிம்மதியாய்– திருப்தியாய்...

"திரிநேத்ரா"– அவன் மென்மையாக அழைத்தான். அதில் அவள் உருகித்தான் போனாள்.

ஆனால்... ஆனால்...

"உங்க மனசைப் பத்தி நீங்க பேசிட்டீங்க. என் மனசைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? அதென்ன 'கண்ணாமூச்சி ஆடறோம்'னு என்னையும் சேர்த்துச் சொல்றீங்க?"

அவள் குரலில் இருந்த வேகத்தில் அவன் அடிபட்டே போனான்.

"இ...இல்ல நேத்ரா..."

அவள் 'நிறுத்து' என்று கையைக் காட்டினாள்.

"லுக் மிஸ்டர் குருராஜ், நான் உங்களிடம் சம்பளம் வாங்கிட்டு ஊழியம் செய்யற ஒரு ஆசிரியை. நமக்குள்ளான உறவு அதுதான்– அதுமட்டும்தான். நீங்களா ஏதாவது கற்பனை செஞ்சுக்கிட்டா அதுக்கு நான் பொறுப்பில்லை. எனக்கு இந்த 'டியூஷன்' பணம் அவசியம். அதுவே உங்களுக்கு அரை நாள் செலவு... ஏதேதோ பேசி என் பிழைப்பில் மண் அள்ளிப் போட்டுறாதீங்க"– சொன்னவள் நிற்காமல் அங்கிருந்து விறுவிறுவென கிளம்பிவிட்டாள்.

இரவு முழுதும் அழுதும் மனம் ஓயவில்லை. விரும்பும்



ஒருவனை ஏற்க முடியாத வறுமை மேல் அவளுக்கு முதல் முதலாய் கோபம் வந்தது.

அவனும் அந்த இரவு தூங்கவில்லை.

வழக்கம் போல் மறுநாள் முதல் 'டியூஷன்' போய் வந்தாள். அவன் ரொம்பப் பேசினால் நின்றுவிடலாம் என்றுதான் நினைத்திருந்தாள். ஆனால், அவனோ அதற்கு நேர்மாறாய், வீட்டிலேயே இல்லாமல் அவளைத் தவிர்த்தான். வீட்டில் இருந்தாலும் இவள் போனவுடன் விருட்டென எழுந்து வெளியேவோ அல்லது மாடிக்கோ போய்விடுவான். இவளைப் பார்த்தவுடன் மலரச் சிரிக்கும் அந்தக் கண்களும், இதழ்களும் இறுகிக் கிடந்தன. மெல்ல தலையசைத்து அவள் வருகையை ஆமோதிப்பதோடு சரி! சளசளவென பேசிய வாய்– சட்டமாய் மூடிக் கிடப்பது அவளையே சங்கடப்படுத்தியது.

ஒருவனால் இவ்வளவு வாடிப்போக முடியுமா?

இவளுக்குக் காப்பியை சமையல்காரம்மா எடுத்து வந்தபோது– ஹாலில் இருந்து அவன் பெரியம்மா, "அந்தப் பிள்ளைக்குக் கூட ஒரு தம்ளர் காப்பி கொண்டு கொடு அருணா. என்னவோ நாலு நாளா சரியாச் சாப்பிடறதே இல்லை. எதையோ பறிகொடுத்த மாதிரி சுத்தறான். பேசாம ஜானகியை வரவழைக்க வேண்டியதுதான்" என்று புலம்பினாள்.

அது– இவள் வயிற்றைப் பிசைந்தது.

## 6

அன்று பள்ளிக்கூடத்தில் 'சார்ட்'டை மாட்டினாள் திரிநேத்ரா. தினை வகைகள் அழகாக– விளக்கமாக வரையப்பட்டிருந்தது. குழந்தைகள் எளிதில் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக முதல் நாள் மாலை முழுதும் முன் இரவு வரை கண்விழித்துத் தயாரித்திருந்தாள்.

இப்போது குழந்தைகளுக்கு எப்படி விளக்கினால் நன்றாக இருக்கும் என்று மனதில் ஓட விட்டுக்கொண்டு நின்றவளின் கவனத்தை பியூனின் வருகை கலைத்தது.

“நேத்ராம்மா... உங்களைப் பார்க்க ராகுலோட பாட்டி வந்திருக்காங்க.”

‘சுந்தரியம்மாளா? இந்த நேரத்தில் ஏன் இங்கு வரவேண்டும்?’ யோசனையுடன் இரண்டு எட்டில் வாசல் பக்கம் வந்தாள். அவள் கவலைப்பட்டபடியே பதைப்புடன் நின்றுகொண்டிருந்தார் சுந்தரியம்மாள். அருகே தண்ணீர் பாட்டிலை கழுத்தில் மாட்டிக்கொண்டு எந்தக் கவலையும் இல்லாமல் தலையை ஆட்டிக்கொண்டு நின்றான் ராகுல்.

“என்னம்மா விஷயம்?”

“அம்மாடி, ராகுலை கூட்டிட்டு போறேன்... இன்னைக்கு ‘டியூஷன்’ வேண்டாம்...”– பேசும் போதே மூச்சிரைத்தது.

“சரிம்மா. ஏதாவது பிரச்சினையா? நான் ஏதாவது உதவி...”

“நேத்ரா, குருவை ஆஸ்பத்திரியில் ‘அட்மிட்’ பண்ணி இருக்கோம். ‘பைக்’ விபத்து. நேரா அங்கதான் போறேன்.”

அவ்வளவுதான்! நேத்ரா நொறுங்கிப் போனாள்.

“எ... என்ன சொல்றீங்க?”

“என்னத்த சொல்லம்மா? என்ன நிலையில இருக்கான்னு தெரியலை. என் வீட்டுக்காரருக்கு நாலு மணிக்கு முக்கியமான ‘மீட்டிங்’ இருக்கு... பிள்ளையும், மருமகளும் ஆபீஸ் விஷயமா பெங்களூர் போயிருக்காங்க. எனக்குக் கையும் ஓடலை ... காலும் ஓடலைம்மா. என் தங்கைக்கு என்ன பதில் சொல்லப் போறேனோ?”

“கொஞ்சம் இருங்கம்மா. ‘பர்மிஷன்’ சொல்லிட்டு நானும் உங்கக்கூட வரேன். நீங்க ரொம்ப ‘டென்ஷனா’ இருக்கீங்க.”

“மு... முடியுமா? நீ வந்தா... நல்லாத்தான் இருக்கும்...”

“இந்த உதவியைக்கூட செய்யலைன்னா எப்படி?”



குருராஜைப் பார்க்க துடித்த அவள் மனதைக் காட்டிக்கொள்ளாமல் பேசிவிட்டு, ஓடிப்போய் அரை நாள் விடுப்பு சொல்லிவிட்டு வந்தாள்.

மருத்துவமனையில் ‘ஐ.சி.யூ.வில் கண்மூடிக் கிடந்த குருராஜைப் பார்க்க பார்க்க அவள் உடைந்தாள். சிரிப்பும் கும்மாளமுமாய் தன் பின்னால் சுற்றிய அந்த உற்சாக இளைஞனா இது? ஐயோ...

இவர்கள் போகும்போது அவன் பெரியப்பா அங்கிருந்தார்.

ராணி முத்து
சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
‘ராணி முத்து’,
சென்னை–600 007.

“நல்லவேளை ‘ஹெல்மெட்’ போட்டிருந்ததால தலையில அடிபடல. அதிர்ச்சி மயக்கம்தான். காலில்தான் முறிவு இருக்காம். ராத்திரி மயக்கம் தெளிஞ்ச பிறகு– ‘ஸ்பெஷல் வார்டு’க்கு மாத்திடுவாங்க.”

அவர் பேசப் பேச இருவருக்கும் மூச்சு வந்தது.

“க...கால்.”

“ரெண்டு, மூணு மாசத்துக்குக் கட்டுதான். ‘புராஜக்ட்’ முடிஞ் சாச்சு... ஊருக்கு போறேன்னு குதிச்சுக்கிட்டிருந்தானே, ரெண்டு மாசத்துக்கு இங்கதான் டேரா... அதுசரி, எதுக்கு இவங்களை தொந்தரவு பண்ணி கூட்டிக்கிட்டு வந்திருக்க?”– நேத்ராவை சுட்டிக்காட்டி மனைவியிடம் கேட்டார்.

சுந்தரியம்மாள் நன்றி பொங்க அவளைப் பார்த்தபடி, “நீங்க ‘மீட்டிங்’னு சொன்னதால வரமுடியுமோ முடியாதோன்னு பயமாயிடுச்சு. எனக்கு ‘டென்ஷன்’. அதான்...”



ப–2

"சரி... சரி. இவங்களை பண்ணுன மாதிரி உன் தங்கைக்கு போன் செஞ்சு ரகளை பண்ணிடாதே."

"சொல்லாட்டா எப்படிங்க? எனக்கே படபடன்னு வருதே" என்று அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார் சுந்தரியம்மாள்.

"ஆஸ்பத்திரி அது இதுன்னு சொன்னா பயந்துடுவாங்க. அப்படி பயப்படும்படி ஒண்ணுமில்லை அவனுக்கு. அவன் 'வார்டு'க்கு வந்த பிறகு அவனைவிட்டே போன்ல பேசச் சொல்லிடலாம்.

'ஒண்ணுமில்ல. கால்ல சின்ன கட்டுதான்'னு– என்ன? அவனே பேசிட்டேன்னா, அவங்க வர்றதா இருந்தாலும் பதறாமல் வருவாங்க. இங்க பாரு, முதல்ல நீ பதறாதே. பி.பி. எகிறிடும். அப்புறமா உன்னை வேற 'அட்மிட்' பண்ணணும்."

இறுக்கமான சூழலிலும் நிதானமாக– பதறாமல் இயங்கும் அவரை ஆச்சரியமாகப் பார்த்தாள். ஐ.ஏ.எஸ். என்றால் சும்மாவா?

"சரி, வீட்டுக்கு அனு வந்திருப்பால்ல. குழந்தையை வீட்ல அவகிட்ட விட்டுட்டு நான் 'மீட்டிங்'க்கு கிளம்பட்டா?"

"சரிங்க. ஆனா, ராத்திரி... யாரு இங்க..."

அவரும் சற்று யோசித்தார். மனைவிக்கு பி.பி. உண்டு. இப்போது ஏற்கெனவே அவளுக்கு ரத்த அழுத்தம் கூடி இருக்கும். மகளுக்கு நாளை பரீட்சை. இரவு இங்கு கண்விழித்துப் பார்த்துக்கொண்டால் காலையில் எப்படி பரீட்சை எழுதுவாள்? தான் வீடு திரும்ப நள்ளிரவுக்கு மேலாகிவிடும்.

"நங்கநல்லூர்ல உன்... அவன் பேரென்ன– உன்னோட ஒண்ணுவிட்ட தம்பி இருக்கானே... அவனை..."

"அவன் மக வீட்டுக்கு– அமெரிக்கா போயிருக்கான்."

"சரியாப் போச்சு. ஆபீஸ் பியூன் யாரையாவது..."

அவர் முடிக்கும் முன் இளையவள் இடைபுகுந்தாள். "சார், நான் இங்க உதவிக்கு இருக்கேன்..."



அவர்கள் இருவரும் தயங்கினார்கள். 'வயசுப் பெண்ணை எப்படி வயசுப் பையனோடு இரவு நேரம் தங்கச் சொல்வது?'

"இல்ல, பரவாயில்லைம்மா. உங்கம்மா..."

"அம்மாகிட்ட நான் சொல்லிக்கறேன், சார். 'ஸ்பெஷல் வார்டு'க்கு அவர் வந்த பிறகு பரவாயில்லை. 'பியூன்'கூட தங்கலாம். ஆனா, இன்னைக்கு 'ஐ.சி.யூ.'வில் இருந்து மாத்தறாங்க. நல்லா பார்த்துக்கணும். ஏதாவது அவசரம்னா புரிஞ்சுக்கிட்டு டாக்டரைக் கூப்பிடணும். அதனால, வீட்டு மனுஷங்க நாம யாராவது இருக்கறது நல்லது."

அவள் கண்கள் இறைஞ்சின. குரலில் கெஞ்சல் இருந்தது. 'வீட்டு மனுஷங்க நாம' என்று தன்னையும் இயல்பாய் அவள் இணைத்துக்கொண்ட விதம் எல்லாம் சேர்த்து அவர் மனதில் மணி அடித்தது. அவளை அவர் ஆழம் பார்ப்பதை அறியாமல் அவளே பேசிக்கொண்டு போனாள்.

"அம்மாவுக்கு பி.பி. இருக்கு. உங்களுக்கு ஆபீஸ் வேலை. ஒரு ராத்திரி ஆஸ்பத்திரியில் தங்கறதில் எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை."

அவர் சற்று யோசித்துவிட்டு, "சரி" என்றார். மனைவியிடம் திரும்பி, "நீ கொஞ்ச நேரம் இங்கேயே இரு, சுந்தரி. அப்புறமா வீட்டுக்குக் கிளம்பு. வீட்ல எனக்காக முழிச்சுக்கிட்டு இருக்காதே. மாத்திரை போட்டுக்கிட்டு நல்லாத் தூங்கு. அப்பத்தான் காலையில சீக்கிரமா வந்து இவங்களை அனுப்ப வசதிப்படும். நாளைக்கு இவங்க வேலைக்குப் போகணுமில்ல."

நேத்ராவைப் பார்த்தபடி மனைவிக்கு ஆணைகளைப் பிறப்பித்துவிட்டு, பேரனோடு கிளம்பிப் போனார். மனதில் மட்டும் ஆயிரம் கணக்குகள். 'பஞ்சும், நெருப்பும் பற்றிக்கொண்டால், பற்றிக்கொண்ட இடம் தன் வீடு என்பதால் நாளை மைத்துனி குடும்பத்துக்கு தானும், தன் மனைவியும் அல்லவா பதில் சொல்ல வேண்டும்? இதுபற்றி ஜாடையாகவாவது குருவிடம் பேசிவிட வேண்டும்.'

மன இறுக்கமும், தயக்கமும் அவருள் ஒரு கலக்கத்தை ஏற்படுத்தின.

இரவு எட்டு மணிவாக்கில் குருராஜை தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து சாதா அறைக்கு மாற்றினார்கள். நினைவு திரும்பியவன் முகத்தில் வலியின் வேதனையையும் மீறி இவளைப் பார்த்தவுடன் மலர்ச்சி ஏற்பட்டது. அறை மாறி இவன் சற்று ஆசுவாசப்பட்ட பின் பெரியம்மா கிளம்ப ஆயத்தமானபோது கூடவே வழியனுப்ப இவளும் போக, தன்னிடம் சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிட்டாள் என்றுதான் நினைத்து மனம் புழுங்கினான், குருராஜ்.

அறை மாறும் போதெல்லாம் உதவினாளே தவிர, ஒரு வார்த்தை தன்னிடம் அவள் பேசவில்லை.

"டீச்சர்தான்டா ரொம்ப உதவியா இருந்தாங்க" என்று பேச்சுவாக்கில் பெரியம்மா சொன்னபோதுகூட, அவனை நிமிர்ந்து பார்த்து ஒரு புன்னகைகூட சிந்தாமல், ஏதோ பானம் கலப்பதிலேயே கவனமாய் இருந்தாள் அவள். இப்போது சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிட்டாள்... ராட்சசி... அழகான ராட்சசி!

அவனை அதிகம் கலங்கவிடாமல் அவள் வந்துசேர்ந்தாள். அவளை எதிர்பார்க்காதவன் சட்டென பூத்த சந்தோஷத்தை மறைத்தபடி அவளது முகம் பார்த்து கேட்டாள்.

"ஏதாவது விட்டுட்டுப் போயிட்டீங்களா?"

பதற்றம், உடல் காயம், ஊமை வலி, தன்னால்– தன் நிராகரிப்பால் ஏற்பட்ட மனக்காயம் போன்ற கலவையால் அவன் துவண்டிருப்பது அவளுக்குப் புரியாமல் இல்லையே!

"உங்களைத்தான் விட்டுட்டுப் போயிட்டேன்" என்றாள்.

அவன் முகம் பளிச்சென மின்னியது.

"கூடவே கூட்டிப் போனாலும் வரத் தயார்னுதானே சொல்றேன்"– மெல்லிய குரலில் சொன்னான்.



விருட்டென திரும்பியவள், "ஹலோ, பேச்சு எல்லை தாண்டாம இருந்தா நல்லது" என்றாள்.

"உண்மையைச் சொன்னா ஏன் கோபம் வருது?"

"எது உண்மை?"

"உங்க மனசுல நான் இருக்கேன்."

"பொய்."

"அப்ப எனக்கு அடிபட்ட உடனே ஏன் ஓடி வந்தீங்க?"

"உதவி செய்ய."

"அதுக்குப் பேர்தான் காதல்."

"வெளியே போய் சொல்லாதீங்க... சிரிப்பாங்க., அதுக்குப் பேர்தான் மனிதாபிமானம்"– சொல்லிவிட்டு எழுந்தவள், "சிஸ்டர்" என்று அழைத்தபடி வெளியே போனாள். "சலைன் முடியப் போகுது. பாட்டில் மாத்தணுமா?" என்று நர்சிடம் அவள் பேசுவது கேட்டது.

அவன் கண்களை மூடி அப்படியே சாய்ந்துகொண்டான். உடலைவிட மனம் அதிகம் வலித்தது.

'ஏன் உண்மையை ஒப்புக்கொள்ள மறுக்கிறாள்?'

**ம**றுநாள் இரவு பெரியப்பாவே ஆஸ்பத்திரியில் தங்குவதாய் சொன்னார். அவனுக்கு அவள் வராதது ஏமாற்றமாய் இருந்தது. ஆனால், காட்டிக்கொள்ள முடியவில்லை. ரொம்ப நேரம் கட்டுப்படுத்த முடியாமல் மெல்ல ஆரம்பித்தான்–

"டீச்சர்..."

"ஏன்? வராதது ஏமாத்தமா இருக்கா?" வெடுக்கென அவர் கேட்க, இவன் துணுக்குற்றான்.

"ம்...இ...இல்ல...வ...வந்து..."

"இங்க பாரு குரு, கழுதைக்கூட குட்டியா இருக்கும்போது அழகுதான்னு சொல்லுவாங்க. அழகான பெண்களைப் பார்த்த விசிலடிக்கிற வயசு உன்னோடது. அத்தோட நிறுத்திக்கற

நல்லது. ஏதுடா பெரியப்பா இப்படியெல்லாம் பேசறாரேன்னு நினைக்காதே. என் அனுபவத்துக்கே உன் வயசு இருக்கும் தெரியுமா? நம்ம தகுதிக்கு அவ கால் தூசு பெறமாட்டா. 'படிக்க அனுப்பின பிள்ளையை நீ பார்த்துக்கற லட்சணம் இதுதானா?'ன்னு உன் அப்பா என்னைக் கேட்கற மாதிரி ஒரு நிலைமையை ஏற்படுத்திடாதே, சரியா?"

அவனுக்குப் பொங்கிக்கொண்டு வந்தது. கட்டுப்படுத்த முடியாதவனாய், "அவ என்னை விரும்பலை... போதுமா?" என்றான்.

"அப்ப நீ உன் மனசை அவகிட்ட இழந்திருக்கிறது உண்மை."

அவர் மடக்கினார்.

இவன் கால் நன்றாக இருந்திருந்தால், விருட்டென அறையைவிட்டுப் போயிருப்பேன்.

"பெரியப்பா, முடிஞ்சுபோன கதையைத் தோண்டி..."

"முற்றுப்புள்ளி வச்சிருந்தா சரி. 'கமா'வா இருந்துடக் கூடாதேன்னுதான் கவலைப்படறேன்."

இழுத்துப் போர்த்திப் படுத்திவிட்டார் பெரியப்பா.

அவனுக்குத்தான் தூக்கம் முழுதாய்த் தொலைந்துபோனது.

## 7

அன்று வழக்கம் போல் 'டியூஷன்' எடுக்க ராகுல் வீட்டிற்குப் போனாள் திரிநேத்ரா. 'குருராஜ் வீடு திரும்பிவிட்டானா?' என அவள் கண்கள் வழக்கம் போல் தேடின.

காப்பியை கொடுக்க வந்த பெரியம்மா, "அம்மாடி, நல்லபடி குரு வீடு வந்து சேர்ந்துட்டான்ம்மா. அன்னைக்கு நீ செஞ்ச



உதவியை என்னால மறக்கவே முடியாது. குறைஞ்சது ஒரு மாசம் 'பெட் ரெஸ்ட்' எடுக்கணும்னு டாக்டர் சொல்லி இருக்கார்" என்றார், மனம்நிறைந்த நன்றியுடன்.

அவளுக்கு உடனே ஓடிப்போய் அவனைப் பார்க்க வேண்டும் என்று எழுந்த ஆர்வத்தை அப்படியே அடக்கிக்கொண்டாள். மருத்துவமனையில் அவன் பெரியப்பா பேச்சில் தெரிந்த அழுத்தம் அவளை மேலும் அடக்கி வாசிக்க வைத்துவிட்டது.

ஆயிற்று! ஒரு மாதம் ஓய்வு எடுத்தபின் தன் ஊர் திரும்பிவிடுவான். பின்னர் கால மாற்றத்தில் அப்படியே தன்னை மறந்துவிடப் போகிறான். இந்த ஒரு மாதம் தன் நினைவால் சற்று அலைக்கழிக்கப்படுவான். அவ்வளவுதானே! மாறாக, தானும் விரும்புவதாய் அவனிடம் உண்மையை உளறி வைத்தால், அவனது குடும்பத்தில் எத்தனை பெரிய சூறாவளி வீசும்? இத்தனை வசதியும், செல்வாக்கும் உள்ள குடும்பத்தில் இருந்து அவனை தனக்காக பிரித்துச் சென்று, அவனையும் தன் வறுமையில் ஆழ்த்துவதில் அவளுக்கு உடன்பாடில்லை. அதனால் அவன் வீட்டினர் மனதில் எந்தச் சந்தேகமும் வராத வண்ணம் நடந்தகொள்ள வேண்டும் என்பதால்– 'மயிலிறகு குட்டி போடாது' என தெரிந்தும் அதைப் பொத்திப் பொத்திப் பாதுகாக்கும் சிறுமி போல் தன் காதலை மனதில் வைத்துப் பூஜித்தாளே தவிர– வெளியே துளியும் காட்டிக்கொள்ளவில்லை. ஒருமுறைகூட அவனைப் பார்க்க முயலவில்லை.

அவனோ அதைவிட்டு வெளியே வரமுடியாமல் தவித்தான். இவள் பாடம் சொல்லிக் கொடுக்கும் அறைக்குப் பக்கத்து அறையில்தான் அவன் படுத்திருந்தான்.

அவள் வருவது சன்ன கொலுசொலி மூலம் தெரியும். அனுவின் கொலுசொலி போல் ஆர்ப்பாட்டமாய் இல்லாமலும், அண்ணியினுடையதைப் போல் அமைதியாய் இல்லாமலும் செல்லச் சிணுங்கலாய் இவள் கொலுசொலி அவனுக்கு





இசைக்கும். ராகுலின் ஓட்டமும், "மிஸ்... மிஸ்" என்று மேல் தொனி பேச்சும் அவளின் இடுப்பை ஒவ்வொரு நொடியும் அவனுக்குப் பறைசாற்றும். இருந்தும் என்ன?

அவன் எதிர்பார்த்தது போல் ஒருமுறை கூட அவள் வந்து அவனைப் பார்க்கவில்லையே? உண்மையிலேயே அவள் தன்னை விரும்பவில்லையோ?

ஐயோ! அவன் அப்படி நினைக்கவே விரும்பவில்லை. அப்படி அது உண்மையாய் இருந்தால், அவனால் அதைத் தாங்க முடியும் என்றே தோன்றவில்லையே!

ஒரு மாதம் கண்ணாமூச்சி காட்டி ஓடியது. குருராஜ் மெல்ல வீட்டுக்குள்– ஊன்றுகோல் உதவியால் நடக்கத் தொடங்கி இருந்தான். அன்று வகுப்பிற்கு அவள் வந்தபோது, ராகுலுடன் அவனும் உட்கார்ந்திருந்தான். இதை எதிர்பார்க்காத அவள் தடுமாறிப் போனாள். ராகுலின் பாடப் புத்தகத்தில் இருந்து தலையைத் நிமிர்த்தியவன், இவளைப் பார்த்தவுடன் சிரித்தான். அவன் நடமாடுவதில் அவளும் மகிழ்ந்துதான் போயிருந்தாள். ஆனாலும்...

"ஹாய், ஐ'ம் குருராஜ். ராகுலோட சித்தப்பா" என்றான். ஒரு நொடி புரியாமல், 'ஏன் புதிதாய் அறிமுகம் செய்துகொள்கிறான்?' என்று விழித்தாள்.

"இல்ல, நியாயகப்படுத்தினேன்" என்று அவனே கசப்பான ஒரு சிரிப்பை சிந்தியவுடன்தான் அவளுக்கு உரைத்தது.

"அப்படியா? எனக்கு வகுப்பு ஆரம்பிக்கணும்" என்றாள் அவள், கண்டுகொள்ளாதது போல் கறாராக.

அவன் பெருமூச்சுவிட்டு எழுந்தான். 'உன்னைத் திருத்த முடியாது' என்பது போல் பார்த்தவன், "உனக்கு முக்கியமா இல்லாமல் இருக்கலாம். ஆனா, சொல்லவேண்டியது எனக்கு அவசியம்... நாளைக்கு நான் ஊருக்குக் கிளம்பறேன்" என்றான்.

"நா... நாளைக்கேவா?" அவளையும் மீறி அதிர்ச்சி வெளிப்பட்டது.

"ஆமாம். எங்கிட்ட இருந்து உனக்கு நிரந்தர விடுதலை."

"கால்... இன்னும்... சரியா..."

"ரொம்பத்தான் அக்கறை" என்றவன்– அதற்கு மேல் எதுவும் பேசாமல் ஊன்றுகோல் உதவியுடன் நடந்து போனான்.

**ம**றுநாள். ராகுல் வீட்டில் அவளுக்கு வகுப்பு கிடையாது. ஆனால், மதியம் முதலே அவளுக்குப் பள்ளியில் இருப்புக் கொள்ளவில்லை. சில மாதப் பழக்கம்தான். ஆனால், ஒருவனால் தன்னை இந்த அளவு பாதிக்க செய்ய முடியுமா? ஏதோ, வாரத்தில் நான்கு நாட்கள் அவனை சில மாதங்களாய்ப் பார்க்கிறாள். அதிலும் பேசிய பொழுதுகளை எண்ணிவிடலாம். ஆனாலும், ஜென்ம ஜென்மமாய்ப் பழகிய ஒரு உணர்வு. தன் மனதை அவனிடம் திறக்காவிட்டாலும், தான் அவனை விரும்புவதை அவள் மனம் மறுக்கவில்லையே! தனது மனம் கவர்ந்தவன் உள்ளூரில்தான் இருக்கிறான் என்ற எண்ணமே தன்னுள் எத்தனை உயிரோட்டமாய் இருந்து– தன்னை உற்சாகமாக இயங்க வைத்துள்ளது என்பதை இப்போதுதான் அவளே உணர்ந்திருக்கிறாள். இனி அவன் இங்கு இருக்கப் போவதில்லை. ஏனோ தன் உயிரை யாரோ எடுத்துப் போடுவதைப் போல் ஒரு தவிப்பு அவளுள். ஏன்? ஏன் இப்படி?

வகுப்பில் அவளால் வழக்கம் போல் ஆர்வமாய்ப் பாடம் எடுக்க முடியவில்லை. மாணவ–மாணவிகளை நான்கு கேள்விகளைப் படித்து எழுதச் சொல்லிவிட்டு பேசாமல் உட்கார்ந்துவிட்டாள். அலைபாயும் மனதை அடக்க முடியாமல் கைபோன போக்கில் 'டைரி'யில் எழுதினாள்–

**"நீ வானம்**

**நான் பூமி!**

**இணைக்கும் கோடு எங்கே?**



**நீ ஒன்றாய்**

**நான் ஒன்றாய்**

**பிரிந்து கிடக்கும் தண்டவாளம் நாம்!**

**இணைக்கும் புள்ளி எங்கே?**

**நீ வைரம்**

**நான் பித்தளை**

**உன்னை என்னுள் பதிக்கும்**

**ஆசை ஏன்?**

**'ராஜ பார்வை' பார்க்க**

**இந்தத் திரிநேத்ரத்திற்குச்**

**சபலம் ஏன்?"**

வகுப்புப் பாடத்தை குறிப்பெழுத வைத்திருந்த 'டைரி'யில் தன்னை மறந்து எழுதியவள், கண்களை மீறி வழியத் துடித்த கண்ணீரை மாணவ–மாணவிகள் பார்த்துவிடாதபடி சிரமப்பட்டுக் கட்டுப்படுத்தினாள். அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவளாய் வகுப்பைவிட்டு வெளியேறியவள், 'தாங்க முடியாத தலைவலி' என்று விடுப்பு சொல்லிவிட்டு வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். அம்மாவும் வேலைக்குப் போயிருக்க, பேசி அமைதிப்படுத்த யாருமில்லாமல் பொங்கிப் பொங்கி அழுதாள் திரிநேத்ரா.

**நா**ன்கு மணிவாக்கில் அவள் கைபேசி அலறியது. கண்களைத் துடைத்துக்கொண்டு மூக்கை நன்றாக உறிஞ்சியபடி எடுத்தாள். குருராஜ் பெயர் மின்னியது. 'கிளம்பிவிட்டானா? சொல்லிக்கொள்ள அழைக்கிறானா?' மெல்ல எடுத்து அழுத்தினாள்.

"ஹ...ஹலோ"

**"நான் வானம்**

நீ பூமி
இணைக்கும் கோடு-
மழைத்துளிகள்.
நீ ஒன்றாய்
நான் ஒன்றாய்
இணைந்து ஓடும் தண்டவாளம் நாம்!
நம் மீது ஓடும் பயணப் பெட்டிகள்
நம் குழந்தைகள்.
நான் வைரம்
நீ பிளாட்டினம்
என்னை உன்னுள்
பதிக்க ஆசை!
'ராஜ பார்வை' பார்க்க.
திரிநேத்திரத்தை விட
சிறந்தவர் யார்?"-

அவன் மடமடவென பொழிய- அவள் பேச்சிழந்து போனாள். தான் மனதில் தோன்றியதை ஏதோ கிறுக்க, அதையே சற்று மாற்றி தேர்ந்த கவிஞன் போல் பேசுகிறானே...

அவள் எழுதியது அவனுக்கு எப்படித் தெரிந்தது?

"நேத்ரா?"

"ம்..."

"மனசுல இவ்வளவு ஆசையை வச்சுக்கிட்டு ஏம்மா என்னை இப்படித் தவிக்க விட்டே?"

அவளால் எதுவுமே பேசமுடியவில்லை. அவன் மென்மையாகக் கேட்டவுடன் தாங்க முடியாமல் பொங்கிப் பொங்கி அழுதாள்.



"நேத்ரா, பிளீஸ். அழாதேம்மா."

அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"உன்கிட்ட கொஞ்சம் பேசணும்."

"ம்..."

"கதவைத் திறக்கறியா?"

"க...க...க..." மேலே பேச முடியாமல் ஓடிப் போய் கதவைத் திறந்தாள். அவன் நின்றுகொண்டிருந்தான். ஊன்றுகோல் மீது கையூன்றி, கதவின் நிலை மீது சாய்ந்தபடி- நின்றிருந்தான்.

அப்படியே அவன் மேல் சாய்ந்து கேவிக் கேவி அழுதாள் திரிநேத்ரா.

## 8

"காப்பி நல்லா இருக்கு, நேத்ரா" அவன் சொல்ல- மென் புன்னகையைத் தவழவிட்டாள் நேத்ரா. அப்போதுதான் வந்த பாலை சுண்டக் காய்ச்சி புது 'டிகாஷன்' போட்டு சுவையாய்த் தயாரித்திருந்தாள். தனக்கும், அம்மாவுக்கும் மாலையில் காப்பி- மறுநாள் மோர் தயாரிக்க தயிர் என்று எல்லாவற்றிலும் துண்டுவிழும் என்பது தெரியும். இருந்தும், அவனுக்குத் தண்ணியையா தரமுடியும்?

உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருந்து மீண்டவள் இப்போதுதான் தன் நிலை பற்றியும், வீட்டின் நிலை பற்றியும் யோசித்தாள். தலை கலைந்து, அழுது வீங்கின முகம்... 'ச்சே! இப்படியா அவன் முன் நிற்கிறோம்! வீடு- அட, வீடா இது? ஒரே அறை- பத்துக்கு ஐந்து என்ற அளவில். இருவர் படுத்தால் அடுத்தவர் நிற்கக்கூட முடியாது. ஓரத்தில் சின்னத் தடுப்பின் பின் சமையலறை என்ற பெயரில் சிறு மேடை, ஒரு அலமாரி. அவ்வளவுதான். ஒரே காம்பவுண்டில்

வரிசையான பத்து வீடுகள்! ஒண்டிக் குடித்தனங்கள். மதியம் எல்லோருமே வேலைக்குப் போயிருந்ததால், குருராஜின் வருகை அங்கே அதிக சலனத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால், அவள் மனதில் அலை அலையாய் சலனம்.

அவளது வீட்டிற்குள் இரண்டு நாற்காலிகள், ஒரு ஓரமாய் அவள் படிக்க சிறு சாய்வு மேசை. மறுஓரம் சுருட்டி வைக்கப்பட்ட பாய், தலையணைகள், உடைவைக்கும் இரு பெட்டிகள்– அவ்வளவுதான். மொத்த சொத்தே! இந்தச் சூழலில்– குப்பைத் தொட்டி மேல் வீசப்பட்ட தங்க ஆரம் போல்– அவன் உட்கார்ந்திருந்தது அவள் கண்களுக்குப்பட்டது.

"என்ன பார்க்கற?"

"உங்க வாழ்க்கையில் இந்த மாதிரி ஒரு வீட்டை நீங்க பார்த்திருக்கீங்களா?"

"இந்த மாதிரி ஒரு தேவதையைக்கூட நான் பார்த்ததில்லை, நேத்ரா."

"ராஜ், நம்ம ரெண்டு பேருக்குமே சின்ன வயசு. மனசுல ஆசையை வளர்த்துக்கிட்டோம். ஆனா, நடைமுறைக்கு இது சரிப்படாது."

"அதான் உன் மனசை மூடி மூடி வச்சியா?"

"இந்த வீட்டைப் பார்த்தீங்களா?"

"அதனால என்ன? நானா வந்து இங்க வாழப் போறேன்? நீ வந்து என் வீட்டில் மகாராணி மாதிரி இருக்கப் போறே."

அவள் பெருமூச்சுவிட்டாள். அவன் பெரியப்பா மருத்துவ மனையில் அவளைப் பார்த்த பார்வையும், பேசிய தொனியும் இவன் அறிவானா?

"நம்ம ஊரைப் பொறுத்தவரை காதல் ரெண்டு பேர் சம்பந்தப்பட்டது. கல்யாணம்னு வரும்போது ரெண்டு குடும்பம் சம்பந்தப்பட்டது. அந்தஸ்து பேதம் நமக்குள்ளே பெரிய பள்ளமா



இருக்கு. இப்பவும் சொல்றேன், ராஜ்... இது சரிப்படாது."

"எங்க அம்மாவைப் பத்தி உனக்குத் தெரியாததால நீ பயப்படறே, நேத்ரா. ஒரு நல்ல பெண்ணை நான் தேர்ந்து எடுத்திருக்கேன்னு சந்தோஷம்தான் படுவாங்க... சரி, எனக்கு மொத்தமா ஒரு ஆறு மாசம் அவகாசம் கொடு. எம்.பி.ஏ. பரீட்சை முடிவு வந்த உடனே எங்க நிர்வாகத்துல நான் பங்கெடுக்கணும்னு அப்பா சொல்லிட்டாரு. பொறுப்பு ஏத்தவுடனே நம்ம விஷயத்தை வீட்ல சொல்லி நம்ம கல்யாணத்துக்கு ஏற்பாடு செஞ்சுடறேன். போதுமா?"

அவள் என்ன சொல்வாள்? தன் மனதையோ திறந்து காட்டிவிட்டாள். பேசாமல் அவன் ஊருக்குப் போயிருந்தால், எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது. இப்போது அவள் என்ன சொல்வாள்? என்ன சொல்ல முடியும்?

"நான் என் சக்திக்கு மீறி ஆசைப்பட்டுட்டேன், ராஜ். எங்க அம்மாவால– இப்ப இருக்கற நிலையில– பொன் வைக்கற இடத்துல பூ கூட வைக்க முடியாது."

"பொன்னால செஞ்ச சிலை மாதிரி நீ இருக்கியே. உன்னை விடவா பொன்னும், பொருளும் பெரிசு?"

"உங்க பேச்சு கேட்க நல்லா இருக்கு."

"நடைமுறைக்கும் சாத்தியம்தான்."

"சரி, கேட்கணும்னு நினைச்சேன். எப்படி நான் எழுதின வரிகளை... நீங்க மாத்தி..."

அவன் தன் சட்டைப் பையிலிருந்து அவளுடைய சின்ன 'டைரி'யை எடுத்தான்.

"நீ எழுதிட்டு அப்படியே வகுப்பில் 'டைரி'யை விட்டுட்டு வந்துட்டே. மாணவிகள் அதை உன்கிட்ட கொடுக்க வந்திருக்காங்க. நீ அதுக்குள்ள வீட்டுக்குக் கிளம்பிட்டே. அதனால, வாணிகிட்ட 'டைரி'யைக் கொடுத்திருக்காங்க. ஏதோ 'டைம்டேபிளை' பார்க்க

அதைத் திருப்பின வாணி கண்கள்ல உன் கவிதை பட்டிருக்கு. நீ மனசுக்குள்ள வெச்சு மருகறதை ஏற்கெனவே தெரிஞ்சு வச்சிருந்த வாணிக்கு, நான் ஊருக்குக் கிளம்பற விஷயமும் உன் மூலமே தெரிஞ்சிருக்கு. எனக்கு போன் செஞ்சு வரவழைச்சுப் பேசினாங்க.

'தன் ஏழ்மை நிலையால உங்க அன்பை ஏத்துக்க அவ தயங்கறா. உண்மையிலேயே நீங்க அவளை விரும்பினா, பெத்தவங்களோடு வந்து அவளை உங்க செலவில் கல்யாணம் செஞ்சுகிட்டுப் போங்க'ன்னு சொல்லி இந்தக் கவிதையைக் காட்டினாங்க. அவங்க சொன்னபடி இப்ப உன்கிட்ட பேசிக்கிட்டிருக்கேன். ஆறே மாசம் கொடு. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கூட்டிப் போறேன். என் அந்தஸ்தைப் பார்த்து பயப்படாதே நேத்ரா. ஐ லவ் யு சோ மச். உன் அன்பு மட்டும் போதும். என்னை நம்ப மாட்டியா? இது சத்தியமான உண்மை."

அவன் இறைஞ்சிய விதத்தில் அவள் கரைந்து போனாள்.

"இந்த ஜென்மத்துல எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா, அது உங்கக்கூட மட்டும்தான், ராஜ். உங்களை நம்பறேன். இந்த ஜென்மம் முழுசும் உங்களுக்காகக் காத்திருப்பேன். போதுமா?"

இப்படியெல்லாம் சொன்னவள் எங்கே, ஏன்? எப்போது மாறிப் போனாள். எத்தனை யோசித்தும் குருராஜிக்கு தெரியவில்லை. ஆறு மாதம் காத்திருக்க முடியவில்லையா?

'என் நதியே என் கண்முன்னே வற்றிப் போனாய்?'

இப்போது விதி அவளை ஏன் என்னிடமே கொண்டு சேர்த்திருக்கிறது? சரவணன் என்ன ஆனான்? தன்னை விரும்பியதாகச் சொன்னவள் எப்படி சரவணன் பக்கமும் சாய்ந்தாள்? பின் ஏன் அவனையும் மணம் முடிக்கவில்லை? சரவணனிடம் சேராமல் எதற்காக இங்கு வந்தாய்? 'வான் மழையாக என்னைத் தேடி மண்ணில் வந்தாய்' ஏன் பெண்ணே? ஏன்? புரண்டு புரண்டு படுத்தும், அவனுக்கு உறக்கம் வரவில்லை.



மாறாக விடியலுக்கு அறிகுறியாய் சில்லென்ற காற்றும், பறவைகளின் ஓசையும்தான் மிதந்து வந்தன. உறங்காத விழிகள் அனலாய்க் கொதித்தன.

## 9

காலை உணவை அம்மாவும், மகனுமாய் சாப்பிட்டார்கள். கைகழுவிவிட்டுவெளியே வந்தவன், தோட்டத்துப் பக்கம் குழந்தைக்கு திரிநேத்ரா விளையாட்டுக் காட்டிக்கொண்டு இருப்பதைப் பார்த்தான். ஜன்னல் பக்கமாய் தொலைபேசியை எடுத்து– பேசுவது போல் வந்தவன்– அவள் கேட்கும் வண்ணம்...

"வார்த்தை தவறிவிட்டாய்– அடி கண்ணம்மா,

மார்பு துடிக்குதடி!

பார்த்த இடத்திலெல்லாம் உன்னைப் போலவே

பாவை தெரியுதடி!" என்று பாடினான்.

பந்தை எடுத்துக் குழந்தையிடம் போட இருந்தவள், அப்படியே நிமிர்ந்து அவனை வெறித்தாள்.

"பாரதியாரை எந்தப் பொண்ணு ஏமாத்தியிருப்பா? செல்லம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு 'கண்ணம்மா, கண்ணம்மா'ன்னு உருகி உருகி காதல் பாடல் எழுதினவரு எப்படி இவ்வளவு அழகா ஒரு பெண்ணால வஞ்சிக்கப்பட்ட ஆணோட வேதனையை பாட்டா எழுத முடிஞ்சது? 'கிரேட்'ம்மா பாரதி"– கிண்டல் சிரிப்போடு இவளை ஓரக் கண்ணால் பார்த்தவன் அம்மாவிடம் சொல்வது போல் சொல்லிச் சென்றான்.

ஒவ்வொரு வார்த்தையும் முள்ளாய் அவள் மனதில் தைத்தது. தன் அம்மாவுக்கு 'ஆபரேஷன்' நல்லபடி நடக்க வேண்டுமே

என்று தவித்தவளுக்கு இவன் வார்த்தை சாடல்கள் அதிக வேதனையைத்தான் தந்தன.

வார்த்தை– உண்மையில் தவறியது யார்?

## 10

காரை அவனே லாவகமாய் ஓட்டிக்கொண்டு வந்தான். ‘ஆபரேஷன்’ முடிந்த இவளின் அம்மாவைப் பார்த்துவிட்டு திரும்பிக்கொண்டு இருந்தார்கள்.

அன்று காலை 9 மணிக்கு ‘ஆபரேஷன்’ என்பதால், விடிகாலையே எழுந்து அவள் கிளம்பிவிட்டாள். குருராஜின் ஆணைப்படி அவளை ஏற்றிச்செல்ல கார் தயாராக இருந்தது.

இவள் மருத்துவமனைக்குச் போய்ச் சேர்ந்தபோது, அம்மா ‘ஆபரேஷன் தியேட்டர்’ செல்லத் தயாராக இருந்தார். இவளைப் பார்த்தவுடன் முகம் மலர சோகையாய் ஒரு புன்சிரிப்பைச் சிந்தினார். ஒற்றையாய் வந்து நின்ற மகளைப் பார்த்தவுடன் கண்கள் கலங்கிவிட்டன.

‘கணவன், குழந்தை சகிதமாய் இந்தப் பெண் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஆபரேஷனில் ஏதாவது நேர்ந்து தான் மரணித்துவிட்டால் இவள் அநாதையாக அல்லவா இந்த உலகில் நிற்பாள்? கையில் பைசா இல்லாதவளை யார் முன்னின்று மணம் முடிப்பார்கள்? இவளுக்காகவாவது கடவுள் தனக்கு ஆயுசைப் போடவேண்டும். அந்த முதலாளியம்மாள் கையில் காலிலாவது விழுந்து, யாராவது நல்லவன் கையில் அவளைப் பிடித்துக் கொடுத்துவிட்டால் போதும். பிறகு நிரந்தரமாய் தான் கண்மூடினாலும் கவலையில்லை.’– தன் உடல்நிலையைவிட மகளின் எதிர்கால நிலைதான் அந்தத் தாயாரை பெரிதும் வருத்தியது.



ஓடி வந்து அம்மாவின் கரம் பற்றிக்கொண்டாள் நேத்ரா.

“அம்மா, என்ன இது குழந்தை மாதிரி? ஆபரேஷன்ல உனக்குப் பிழைக்க தொண்ணூத்தொன்பது சதவிகிதம் வாய்ப்பு இருக்குன்னு டாக்டர் சொல்லலையா?”

“எனக்கு என்னவானாலும் பரவாயில்லை, நேத்ரா. உன்னை ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுக்காம போறேனேன்னுதான்...”

‘இந்த ஜென்மத்துல எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது உங்கக்கூட மட்டும்தான், ராஜ்’– தலையை உலுக்கிக்கொண்டாள் நேத்ரா.

இந்த வரிகளுக்கு இனியும் பொருள் உண்டா?

அம்மாவும் தன் சக்திக்கு உட்பட்டு வரன் பார்க்கத்தானே
செய்தாள். பணம், அம்மாவின் தனிமை என்று ஏதேதோ காரணம்
காட்டி இவள்தானே அவற்றையும் தட்டிக்கழித்தாள். அம்மாவின்
கண்ணோட்டத்தில் அவள் பயம் நியாயமானதுதானே!

“நீ எங்கேயும் போகலைம்மா. ஆபரேஷன் தியேட்டருக்குத்தான்
போறே. சரியாகி வந்த பிறகு ஒரு நாலஞ்சு நாள்– உன்
உடல்நிலையைப் பொறுத்து– ஐ.சி.யூ.வில் இருப்பே. பிறகு
ஒரு நாலஞ்சு நாள் சாதா வார்டுல இருக்கணும். அப்புறம்
‘டிஸ்சார்ஜ்’தான். சரியா? அதுக்குப் பிறகு உடனே நீ மலை
ஏறி வர்றது அவ்வளவு நல்லதில்லை. அதேநேரம் தனியா
சென்னையில இருக்கறதும் சரியில்லை. அதனால, உன்னை
கோவையில் ஒரு முதியோர் இல்லத்துல சில மாசம் தங்கிக்கற
மாதிரி எங்க முதலாளி ஏற்பாடு செஞ்சிருக்காரு. இத்தனை
ஏற்பாடும் நீ நல்லபடி உடல்தேறி வந்துடுவேன்னுதான் செஞ்
சிருக்கோம். உனக்கும் நம்பிக்கை வேணும்மா. எனக்காக நீ
நிச்சயம் பிழைச்சு வருவே.”

“அப்ப, நம்ம சென்னை வீடு?”

“ஆமாம், பெரிய பங்களா கெட்டுது போ. வீட்டுக்காரர்கிட்ட

மேசை– நாற்காலியை விலைக்குக் கொடுத்துடச் சொல்லிட்டேன்.
நம்ம துணிமணி பெட்டியையும், நாலு பாத்திரத்தையும் பாது
வீட்ல வச்சிருக்கச் சொல்லிவிட்டேன். அடுத்த மாசம் அந்த
பக்கம் போனா, எப்படி செய்யணுமோ செஞ்சுக்கலாம். இப்ப
நீ நிம்மதியா இரு.”

அம்மாவிற்கு தைரியம் சொன்னாளே தவிர, அம்மாவை உள்ளே அனுப்பிவிட்டு– அவள் தனியே கொட்டக் கொட்ட உட்கார்ந்திருந்தாள். மனதில் வேதனையும், கவலையும் அவளைப் பிடுங்கித் தின்றன. ஆறுதல் கூறக்கூட ஆளில்லாமல் புது ஊரில் அம்மாவுக்கு ஏதும் ஆகிடக்கூடாதே என்ற பதைப்பில் கண்கள் பனிக்க அவள் அமர்ந்திருந்தாள். வாயில் கடவுள் நாமம் இயல்பாய் மூச்சு விடுவதுபோல் ஒலித்துக்கொண்டிருந்தது.

ஜானகியம்மாதான் தொலைபேசியில் அவ்வப்போது தொடர்புகொண்டு ஆறுதல் சொன்னார். அந்த நொடிகளில் உண்மையிலே அவள் நெகிழ்ந்துதான் போனாள்.

“அம்மாடி, இப்ப அம்மா நிலைமை எப்படி இருக்கு? டாக்டர் ஏதாவது சொன்னாரா? கவலையேபடாதே, அம்மா நல்லாயிடுவாங்க. எனக்கு இந்த முட்டிப் பிரச்சினை காரணமா அதிகம் நான் வீட்டைவிட்டே எங்கேயும் போறதில்லை. இல்லாட்டி உன் கூடவே வந்து உட்கார்ந்திருப்பேன். தனியா பாவம் தவிச்சுப் போயிருப்பியே!”

“ஐயோ, அம்மா! நீங்க இவ்வளவு பேசறதே பெரிய ஆறுதல்மா... ‘ஆபரேஷன்’ முடிஞ்சவுடன் சொல்றேன்.”

ஆனால், காலை முதல் குருராஜிடம் இருந்து ஒரு போன்கூட வரவில்லை. முன்னாள் காதலியாய்ப் பார்க்க வேண்டாம். ஒரு ஊழியை– அவள் அம்மாவுக்கு ‘ஆபரேஷன்’. அந்த அளவில் கூடவா ஒரு விசாரிப்பு கிடையாது? ச்சே, என்ன மனிதன் இவன்?

மதியம் பன்னிரண்டு மணி வாக்கில் ‘ஆபரேஷன் சக்ஸஸ்’



என்று ஐ.சி.யூ.விற்கு அம்மாவை மாற்றினார்கள். கண்ணாடிக் கதவின் பின்னால் இருந்து கண்மூடி வாயிலும், மூக்கிலும் குழாய் ஏற்றப்பட்ட அம்மாவைப் பார்த்தாள். தன்னை மீறி கண்ணீர் வழிந்தது. மதியம் தனியே எதுவும் சாப்பிடப் பிடிக்காமல் இரண்டு காப்பி குடித்தாள்.

இரவு எட்டு மணிவாக்கில் அம்மா லேசாக கண் விழிப்பதாய் சொல்ல, ஆர்வமாய் எட்டிப் பார்த்தாள். அம்மா இலக்கில்லாமல் வெறித்தாளே தவிர, இவளைக் கண்டுகொண்டதாய்த் தெரியவில்லை. எப்படியோ மயக்கம் தெளிந்துகொண்டிருப்பது நல்ல விஷயம்தானே!

அப்போதுதான் புயல்போல் குருராஜ் வந்தான். எடுத்தவுடன் எந்த விசாரிப்பும் இல்லாமல், “போலாமா?” என்றான். அவள் எப்படியாவது அவன் அனுமதி பெற்று அன்றிரவு அங்கே தங்கிவிட்டு, மறுநாள் அம்மா சற்று தெளிவாய்ப் பேசிய பின் கிளம்பலாம் என்று நினைத்திருந்தாள். ஆனால், அவனுடைய ஜிவுஜிவுத்த முகம் அவளைப் பேசவிடாமல் செய்தது. இருந்தும் உடனே கிளம்ப முடியாமல் பாசத்தில் அவள் தயங்கித் தயங்கித் திணற– வள்ளென அவன் விழுந்தான்.

“என்ன, கிளம்ப மனசு வரலையா? பேசாம ஒரு படுக்கை ஏற்பாடு பண்ணி அம்மா பக்கத்துல நீங்களும் படுத்துக்குங்க. தண்டமா நீங்கள் குப்பை கொட்டத்தானே நான் மாசம் இருபதாயிரம் அழறேன்”– அடக்கி கர்ஜித்த குரல்தான் என்றாலும், ஓரிருவர் தலை திரும்பிப் பார்த்தார்கள்.

அவள் கண்கள் குபீரென நிறைந்தன. அதை அவன் பார்த்துவிடாமல் மறைத்தபடி– பதிலே பேசாமல் அவனுக்கு முன்னால் போய் கார் அருகே நின்றாள். டாக்டரிடம் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு பின்னால் வந்தவன், விருட்டென காரைக் கிளப்பினான்.

அவள் மனதில் கோபம் கனன்றது. முதல் நாள் மாலையில்

கூட இவள் மனதைப் பேச்சால் இப்படித்தான் நோகடித்தான்.

இரு தினங்களுக்கு முன் சேகர் இவளிடம் வந்தான். ஜானகியம்மாவின் தூரத்து உறவினன். அநாதையான அவனை இவர் ஆதரித்து வருவதால், அந்த வீட்டில் ஒரு நல்ல நாய் போல் விசுவாசமாய் ஜானகியம்மாவுக்கு வலது கையாய் இருப்பவன்.

"நேத்ராம்மா."

"என்னண்ணே?"

"குருவோட 'பர்சனல் செகரட்டரி'க்கு ரொம்ப உடம்பு முடியாம போயிருச்சு. 'ரிடையர்' ஆகிட்டாரு. வேற ஒருத்தரை ரெண்டு நாள்ல நியமிக்கப் போறாங்க. அதுவரை வீட்ல ஏதாவது முக்கிய அலுவலக சம்பந்தப்பட்ட கடுதாசி மாதிரி இருந்தா கொஞ்சம் பார்த்துக் கொடு. குரு என்னை உதவிக்குக் கூப்பிட்டா, நீ எனக்கு கொஞ்சம் உதவி செய்யும்மா" என்றான்.

அவள் புரியாமல் பார்க்க– "எனக்கு அவ்வளவா படிப்பறிவு கிடையாது. நீ நேரடியா உதவினா அவன் விரும்பமாட்டான்" என்றான்.

அவள் முகம் சட்டென சுறுங்கியது. தங்கள் பனிப்போர் இவன் வரை வந்துவிட்டதா? அவளது முக மாற்றத்தை உணர்ந்தவனாய் சேகர், "சேச்சே, உன் உதவியை ஏற்கமாட்டான்னா தனிப்பட எதுவும் சொல்லலை. அவனுக்குப் பெண்கள்னாலே பிடிக்காது. பி.ஏ.கூட ஆண்களாத்தான் தேர்ந்தெடுப்பான். அதான்..." என்று ஒரு சிரிப்பைச் சிந்திவிட்டு நகர்ந்தான்.

அவளுக்குக் குழப்பமாய் இருந்தது. அனு, அண்ணி என்று ரகளையாய் வீட்டை அவர்களோடு ரெண்டு பண்ணி தன் பின் சுற்றிய ராஜ்– பெண்களை வெறுப்பவனா? ஆனால், சேகர் சொன்னது உண்மை என்பதை அடுத்த முதல் நாள் மாலை அவன் வாயாலே உணர்ந்தாள்.

பொதுவாக அம்மாவும், மகனும் சாப்பிடும்போது இவள் சாப்பிடப் போகாமல் தவிர்த்துவிடுவாள். பெரும்பாலும்



எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு, அம்மாவுடன் சாப்பிட வந்துவிடுவான் குருராஜ். அன்று ஏதோ முக்கிய வேலை போலும். அவன் வரும்முன்னே ஜானகியம்மா மாத்திரைப் போட்டு தன் நேரப்படி சாப்பிட்டுவிட்டார்.

'குருராஜ் எப்போது வருவானோ... அதற்குள் சாப்பிடுவதா? அவன் வர ரொம்ப நேரமாகுமா?' அவள் தயங்கித் தடுமாறி சாப்பிட உட்கார்ந்தபோது– அவனும் சரியாக வந்து சேர்ந்துவிட்டான். சே! அவளால் பாதியில் எழுந்து போகவும் முடியவில்லை. அவனோ திரிநேத்ரா என்ற ஒரு ஜீவனே அங்கு இருப்பதை அறியாதவன் போல் வந்து– கவிழ்ந்திருந்த தன் தட்டை திருப்பி வைத்துக்கொண்டு சாப்பிடத் தொடங்கினான்.

இதுதான் நேரம் என்பது போல் ஜானகியம்மா கையில் கத்தை காகிதங்களோடு வந்தார்.

"குரு, சாப்பிட்டியாப்பா?"

அவன் தயிர் சாதத்தை ஒரு பிடி பிடித்துக்கொண்டிருந்தான்.

"ம், என்ன விஷயம்மா?"

"நானும் சொல்லிக்கிட்டே இருக்கேன். நீதான் காதுலயே போட்டுக்க மாட்டேங்கறியே?"

அம்மாவும், பிள்ளையும் பேசிக்கொள்ள– அவள் குறுக்கே நெளிந்தாள்.

"அம்மா, வளர்க்காம என்ன விஷயம்னு சொல்லும்மா."

"தரகர் புதுசா நாலு பொண்ணுங்க. 'போட்டோ'வைக் கொண்டு கொடுத்துட்டுப் போனார். இப்படியே எத்தனை நாள் இருக்கப் போறே? எனக்கும் வயசாகுது. மனோவும் பெண் குழந்தையாப் போயிட்டா..."

"அவளைப் பார்த்துக்கத்தான் இப்ப இவங்க வந்துட்டாங்களேம்மா..."

"நேத்ரா நல்ல பெண்தான். நல்லபடி மனோவைப் பார்த்துக்கறா. ஆனா, அவளும் ஒரு நாள் கல்யாணமாகிப் போயிடுவாப்பா..."

எதார்த்தமாய் ஜானகியம்மா சொல்ல– இருவரும் சட்டென நிமிர்ந்து பார்த்துக்கொண்டார்கள்.

ஜானகியம்மா அவர்களின் மனஓட்டம் புரியாமல் தன் போக்கில் பேசிக்கொண்டு போனார். "மனோவுக்கு நிரந்தரமா ஒரு அம்மா வேணும்டா."

அம்மா பேசப்பேச நேத்ரா மீது அவன் வைத்த பார்வையின் உக்கிரம் அதிகரித்தது. 'பாவி மகளே, நீ மட்டும் எனக்காக காத்திருந்தால், எனக்கு இத்தனை பிரச்சினை வந்திருக்காது இல்லையா?'

"வர்றவ அம்மாவா இருப்பாள்னு என்னம்மா நிச்சயம்? என்னைத் திரும்ப நரகத்துல தள்ளாதேம்மா. ரெண்டு தடவை பட்டுட்டேன்ம்மா. என்னைப் பொறுத்தவரை உன்னையும், மனோவையும் தவிர இந்த உலகத்துல எந்தப் பொண்ணும் நம்பகமானவ இல்ல"– சொன்னவன் விருட்டென எழுந்து போய் கைகழுவினான். வேகமாய் வெளியேறினான்.

மகனின் மனவேதனை அறிந்த அந்தத் தயாரும் வருத்தத்துடன் எழுந்துபோக, அப்படியே மேசை மீது கவிழ்ந்து அழுதாள் நேத்ரா. தான் நம்பகம் இல்லாதவளாம். மறைமுக குற்றச்சாட்டு! யாரை யார் ஏமாற்றியது?

'புராக்ஜெக்ட்' முடித்து ஊர் கிளம்பிப் போனவன்– ஆறு மாதமாய் தொலைபேசியிலும், அவ்வப்போது நேரில் வந்தும் காதல் வளர்த்தான். ஆனால், என்ன ஆனது அவனுக்கு? திடீரென திருமணம் என்று செய்திதானே வந்தது! தாங்க முடியாமல் அப்போது தவித்தது அவள்தானே! என்னவோ தான் அவனை ஏமாற்றிவிட்டதாக சீறுகிறான்.

இப்போது மருத்துவமனையிலும் குத்திக்காட்டிப் பேசுகிறான்.

எங்காவது ஓடிப் போய்விடலாமா என்றிருந்தது, நேத்ராவிற்கு. ஓடிப்போக முடியுமா? இவன் தயவில் அம்மாவுக்கு 'ஆபரேஷன்' செய்து, முதியோர் இல்லம் பார்த்து... பாதியில் எப்படி எங்கே போக முடியும்? ஆனால், இப்படியே இவனைப் பேச விட்டுக்கொண்டே இருப்பதா?

அவள் மனம் குமுறியபோது, வண்டியை ஓட்டல் முன் நிறுத்தினான். "இறங்குங்க. ஊர் போய்ச் சேர பதினொரு மணிக்கு மேலாகிடும். இங்கேயே சாப்பிட்டுட்டுப் போயிடலாம்."

அவள் எதுவும் பேசாமல் இறங்கினாள். காலை முதல் எதுவும் சாப்பிடவில்லை. அவளுக்கு நல்ல பசி. ஆனால், மனம் பல விஷயங்களால் ரணப்பட்டுக் கிடக்க, 'சாப்பாடுதானா இப்பக் குறைச்சல்?' என்று தோன்றியது. அவள் நினைப்பைப் பொருட்படுத்தாதவனாய், "என்ன சாப்பிடுறீங்க?" என்று கேட்டான்.

வேண்டா வெறுப்பாய், "தோசை" என்றாள்.

அவன் "ஒரு சூப், தோசை, வெங்காய ரவா தோசை, இரண்டு பாதாம் பால்" என்றான் சர்வரிடம். சூப், ரவா தோசை என்று... வர வர அவளிடம் நகர்த்தினான்.

அவளும், அவனுமாய் சென்னையில் சுற்றிய நினைவு அவளது மனதில் ஓடியது. ஒவ்வொரு ரகமாக வாங்கி இருவருமாய் பங்கிட்டு சாப்பிட்ட இன்பப் பொழுதுகள்...

"நீ இத்தனூண்டு சாப்பிட்டா எப்படி வயிறு நிரம்பும்?" என்று– வகை வகையாய் அவளுக்குப் பதார்த்தங்களை அறிமுகம் செய்தவன் அவன்தான்.

இப்போதும் அப்படித்தான் பங்கு போடப் போகிறானா? அதுவும் ஒரே ஒரு தோசையா?

அவள் தொடாமல் தயங்கியபடி இருக்க, "சாப்பிடுங்க. இங்கயே நேரமாக்கினா எப்ப வீடு போய்ச் சேருவதாம்?" என்று கடுகடுத்தான்.



"உ.... உங்களுக்கு?"

"எனக்கு இன்னைக்கு ஒரு விருந்து. வயிறுமுட்ட சாப்பிட்டுட்டு வரேன். நீங்க சீக்கிரமாச் சாப்பிடுங்க. எனக்கு பால் மட்டும் போதும்."

அவள் பொருட்டுத்தான் ஓட்டலுக்கு வந்திருக்கிறானா? பழைய கரிசனம் இன்னும் இருக்கிறதா?

அவனோ முகத்தில் எதையும் காட்டிக்கொள்ளாமல் போனில் வர்த்தகம் பேசுவதில் முனைப்பாய் இருந்தான். அவளும் ருசிக்காகச் சாப்பிடாமல், பசிக்காகச் சாப்பிட்டதால் அவசரமாய் முடித்துக்கொண்டாள். அவன் 'பில்'லை 'செட்டில்' செய்துவிட்டு– காரைக் கிளப்பினான்.

உணவு உள்ளே போனதாலோ என்னவோ சற்று தெம்பாய் உணர்ந்தாள் திரிநேத்ரா. அம்மாவுக்கு நல்லபடி 'ஆபரேஷன்' முடிந்துவிட்டதால் அவர் பற்றிய பயம்– மனதில் இருந்து சற்று அகன்றுவிட, எண்ணம் கோர்வையாய் குருராஜை சுற்றியே வட்டமிடத் தொடங்கியது.

## 11

ஆறு மாதத்தில் வந்து தன்னை மணம் பேசுவதாய் சொல்லிப் போனவன், விடாமல் இவளுடன் தொடர்பு வைத்திருந்தான். தினம் தவறாமல் தொலைபேசியில் பேசினான். இரண்டு வாரத்திற்கு ஒருமுறை வந்து போனான். தன் பெரியப்பா வீட்டிற்குக்கூட தெரியாமல் பலமுறை வந்திருக்கிறான்.

எம்.பி.ஏ. தேர்வு முடிவு வந்தபோது தொலைபேசியில் தகவல் தெரிவித்தவன், மறுநாளே நேரில் வந்து நின்றான். இவளை அழைத்துக்கொண்டு நட்சத்திர ஓட்டலில் தடபுட விருந்து வைத்தான். அந்த ஓட்டலைக் கண்டு மிரண்டு விழித்தவளிட

இயல்பாய் இருக்கப் பழக்கி, ஒவ்வொன்றாய் அறிமுகம் செய்து... யோசித்துப் பார்த்தால், அவள் வாழ்விலேயே அதிக ஆனந்தமாய் இருந்த நாட்கள் அவை மட்டும்தான்!

எல்லாம் திடீரென ஒருநாள் எப்படி இருண்டு போயின? ஏன்?

அவன் கடைசியாகப் பேசியபொழுதுகூட தன் அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லை என்றுதான் சொன்னான். அவளிடம் கோபமோ, வெறுப்போ எதுவும் காட்டவில்லை. பின் ஏன் திடீரென தன் திருமணப் பத்திரிக்கையை– அதுவும் 'உன் துரோகத்திற்கு என் பரிசு' என்ற வரியோடு அனுப்பிவைத்தான்? அன்று அவள் அழுத அழுகை கொஞ்சமா?

தொலைபேசியில் முயன்ற போதெல்லாம் தொடர்பை துண்டித்தான். அவளும் விடாமல் முயன்று– கடைசியில் போனை எடுத்தவன்,

"எதுக்கு இப்படி விடாம தொந்தரவு பண்ணற?"

"உங்க கல்யாணப் பத்திரிகை வந்திருக்கு."

"நான்தானே அனுப்பினேன்."

"அப்ப... அப்ப நாம பழகினதுக்கு என்ன அர்த்தம்?"

"அது நான் உன்கிட்ட கேட்க வேண்டிய கேள்வி."

"அதுல 'துரோகம்'னு எழுதி இருக்கீங்க. எனக்குப் புரியலை."

"உன் மனசாட்சியைக் கேட்டுப் பார், புரியும். இனி என்னை தொந்தரவு செய்யாதே"– பளிச்சென தொடர்பைத் துண்டித்தான்.

மறுநாள் வாணியிடம் சொல்லிக்கொண்டு கதறினாள். அவளைத் தன் மடி மீது சாய்த்துக்கொண்டு தலை கோதிவிட்ட வாணி, "உன்னோட இந்தத் துன்பத்துக்கு நான்தானே காரணம், நேத்ரா. உன் மனசை இரும்பாத்தானேடி வச்சிருந்தே! நான்தானே



உனக்கு நல்லது செய்யறதா அவன்கிட்ட பேசி..."

"பழசை ஏன் பேசணும், வாணி? என் விதி!"

"இல்லடி, உன்கூட பழகிட்டு, விட்டுட்டுப் போயிட்டார். வழக்கமான ஆண் புத்தியைக் காட்டிட்டான்ல" குமுறினாள் வாணி.

"நான் ஏதோ துரோகம் செஞ்சதா எழுதி இருந்தாரே, அதுதான் புரியலை."

"உனக்கு உலகமே புரியலை, நேத்ரா. தான் தப்பிக்க ஒரு காரணம் வேணும். அவ்வளவுதான்! உன்கூட எல்லை மீறிப் பழக நினைச்சிருப்பான். நீ நெருப்புன்னு தெரிஞ்சதும், 'இந்த செருப்பு காலுக்கு உதவாது'ன்னு கழட்டிப் போட்டுட்டான். காரணம் வேணுமில்லை. அதான், உன் மீதே பழி போட்டுட்டான்."

நேத்ராவால் முழுமையாய் வாணியின் கூற்றை ஏற்க முடியவில்லை. ஆனால், மறுக்கவும் முடியவில்லை. அம்மாவுக்குத் தெரியாமல் அழுது கரைந்து கதறி, கடைசியில் ஒருவழியாய்த் தேறினாள். பி.எட். பரீட்சை முடிவு வந்தபின், தனியார் பள்ளிக்கூடம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தாள்.

குழந்தைகளுக்குப் பாடம் எடுக்க மட்டுமே தான் பிறவி எடுத்தது போல்– ஒரு தவம் மாதிரி வேலையில் ஈடுபட்டாள். குருராஜ் என்ற பெயரையே மனதில் குழிதோண்டிப் புதைத்துவிட்டு அவள் வளைய வந்தபோதுதான் அம்மா நிரந்தர நோயாளியாய்ப் படுத்தார். எல்லா பரிசோதனைகளும் எடுக்கப்பட்டன. பணம் நிமிடமாய்ப் பறந்தது.

"ஒரு 'ஆன்ஜியோ' எடுத்துப் பார்த்துடலாம்மா" என்று டாக்டர் சர்வசாதாரணமாய்ச் சொல்ல– அது மட்டுமே பெருந்தொகையை விழுங்கியது. முடிவாவது நல்ல விதமாய் வந்திருக்கக்கூடாதா? இவளுக்காகவே துடிக்கும் அந்த இதயம் 'நின்றுவிடவா?' என்றல்லவா கேட்டது! நாயாய்ப் பேயாய்ப் பணத்திற்கு அலைந்து உறவினரிடம் எல்லாம் மூக்கு உடைபட்டு





தவித்தபோதுதான் விதி அவளை மீண்டும் கொண்டுவந்து குருராஜிடமே சேர்த்திருக்கிறது. இரக்கமே இல்லாத விதி. வேறு வேலையே இல்லாமல் கடவுள் தன் சந்தோஷத்திற்காக மனிதர்களை ஆட்டி வைக்கும் நாடகம்!

அருகே மவுனமாய் காரை ஓட்டும் ராஜை ஓரக்கண்ணால் பார்த்தாள். முகம் இறுகிக் கிடந்தது. தன்னைக் காதலித்த நாட்களில் சிரித்த முகமாய் ‘சளசள’வென பேசிக்கொண்டே இருந்தவனா இவன்? அவள் மனம் மெல்லக் கசிந்தது. தன் மீது பழி சுமத்திப் பிரித்து தவிக்கவிட்டான்; நம்பவைத்து மோசம் செய்தான் என்ற வன்மம் மெல்ல நன்றி உணர்வாய் மாறியது. அறக்கட்டளை மூலம் என்றாலும் லட்சக்கணக்கில் பணம் செலவழித்து யார் இந்தக் காலத்தில் இப்படி உதவி செய்வார்கள்?

கார் வீட்டை நெருங்கிக்கொண்டிருந்தது.

மெல்ல அவள், “அம்மாவை இவ்வளவு தூரம் அக்கறையா– செலவு செஞ்சு ‘ஆபரேஷன்’ பண்ணிக் காப்பாத்தினதுக்கு ரொம்ப நன்றி” என்றாள்.

“அந்த நன்றியைக் குழந்தையைப் பார்த்துக்கற அக்கறையில் காட்டுங்க. உங்க அம்மா முதியோர் இல்லத்துக்குத் திரும்பிய பிறகு அடிக்கடி அவங்களைப் பார்க்க ஓடவேண்டாம்” – சொன்னவன் வண்டியில் இருந்து இறங்கி பளிச்சென கதவை அறைந்து சாத்தினான்.

“அப்படி அடிக்கடி போகணும்னா, நிரந்தரமாய்ப் போயிடுங்க. ஏதோ ஊர் பேர் தெரியாதவங்களுக்கு செஞ்ச உதவியா நினைச்சிட்டுப் போறோம்.”

அவளுக்கு முகத்தில் அறைந்தது போல் இருந்தது. ரணப்படுத்தும் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு எப்படி இங்கே காலம் தள்ளப் போகிறாள்?

இவர்கள் வீடு திரும்பியபோது, அநேகமாக எல்லோரும் உறங்கிவிட்டார்கள். ஜானகியம்மாவை தொந்தரவு செய்ய

வேண்டாம் என்று மெல்ல மாடி ஏறினாள். குழந்தையின் அறையில், அவளோடு படுத்துறங்குவதே இவள் வழக்கம். இவள் வரும் வரை இன்று அஞ்சலை– வீட்டு வேலை செய்யும் பெண் படுத்திருப்பாள். ஹாலில் தண்ணீர் குடித்துவிட்டு இவள் அறைக்குச் செல்லும் முன்– இவளைத் தாண்டிக்கொண்டு குழந்தை அறைக்குப் போனான் குருராஜ்.

அஞ்சலை வாறிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள்.

“இப்ப குழந்தைக்கு எப்படி இருக்கு?”

“பரவாயில்லீங்கய்யா. மாத்திரை போட்டுக்கிட்டு தூங்கிப் போயிருச்சுங்கய்யா.”

“சரி, நீ போ.”

இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே அறைக்குள் நுழைந்தாள், திரிநேத்ரா. ‘குழந்தைக்கு என்ன? எதற்கு மாத்திரை?’

குழந்தையைப் பார்த்தவளுக்கு பகீரென்றது. நெற்றியில் விரலளவு ‘பிளாஸ்திரி’.

“எ... என்னாச்சு? ஐயோ...”

“அது ஒண்ணுமில்லீங்கோ. நீங்க இல்லாம ரொம்ப சாப்பிட படுத்திச்சுங்கோ. சாப்பாடு கொடுக்க பின்னாடியே ஓடின எங்கிட்டே இருந்து தப்பிக்க ஓடின வேகத்துல படியில விழுந்து அடிபட்டுடுச்சுங்கோ. ரத்தமாக் கொட்டி, டாக்டரு வந்து ஊசி போட்டு மருந்தெல்லாம் கொடுத்துட்டுப் போனாருங்கோ. நீங்க எப்போ வருவீங்கன்னு கேட்டு அழுது அழுது இப்பத்தான் தூங்கிச்சுங்கோ.”

போகிற போக்கில் நின்று பதில் சொல்லிவிட்டுப் போனாள் அஞ்சலை.

“வந்த கொஞ்ச நாள்லயே குழந்தை உன்கிட்ட... சாரி, உங்ககிட்ட ரொம்ப ஒட்டிக்கிட்டா. அதை மனசுல வச்சுக்கிட்டு



வேலையைப் பாருங்க.”

அவளுக்குள் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. குழந்தையை ‘அம்போ’வென விட்டுவிட்டு சினிமா, நாடகம் என்று சுற்றிவிட்டா வருகிறாள்?

“என் பொறுப்பு எனக்கும் தெரியும். கைநீட்டி வாங்கற சம்பளத்துக்கு தவறாம கடமையைச் செய்வேன்.”

“செஞ்சாச் சரி. நீங்க வர்றதுக்கு முன்னாடி அம்மாகிட்டயாவது சாப்பிட்டுகிட்டு இருந்தா. இப்ப அதுவும் இல்ல. சாப்பிட, தூங்க, படிக்கன்னு எல்லாத்துக்கும் நீங்க வேண்டியிருக்கு.”

“இதிலிருந்தே நான் என் வேலையை ஒழுங்காச் செய்யறேன்னு நீங்க புரிஞ்சுக்கிட்டிருக்கணும்.”

“ம்... ஆளை மயக்கிக் கைக்குள்ள போட்டுக்கறதுதான் உங்களுக்குக் கைவந்த கலையாச்சே?”– சொல்லிவிட்டு கசப்பாய்ச் சிரித்தபடி வாசல் நோக்கி நகர இருந்தவன் முன் ஆத்திரமாய் வந்து வழிமறித்து நின்றாள்.

“என் முகம் பார்த்துச் சொல்லுங்க. என்னவோ நான் துரோகம் செஞ்ச மாதிரி கல்யாண பத்திரிகையில எழுதி அனுப்பினீங்க. இப்ப ஆளை மயக்கறேன்னு சொல்றீங்க. நான் இங்க வந்ததிலிருந்து வார்த்தையால என்னைச் சாகடிக்கிறீங்க. போதும் சாமி போதும். பணம் பணத்தோடதான் சேறும். அது தெரிஞ்சுதானே நான் பேசாம இருந்தேன். என் பின்னாடி வந்து சுத்தினது யாரு? நீங்கதானே!

‘ஆறுமாசம் பொறு. கல்யாணம் செஞ்சுக்கறேன்’னு சொல்லிட்டுப் போனவருதான். என்னாச்சு? ஆறு மாசத்துல நான் அசைஞ்சு கொடுக்கலை. ‘சீச்சி இந்தப் பழம் புளிக்கும்’னு என்னைக் கைகழுவி விட்டுட்டீங்க. அவ்வளவுதான். அதுக்குக் காரணம் வேணுமே...! என்னைக் கைவிட எவ்வளவு கீழ்த்தரமான காரணம் கற்பிச்சீங்க! அவ்வளவு மோசமா என் மீது களங்கம் சுமத்தி இருக்கணுமா மிஸ்டர் குருராஜ்?”– மூச்சிறைக்க அவள்

பேசப்பேச அவன் முகம் சிவந்தது.

“பேசினே பல்லு முப்பத்திரண்டும் பேந்துடும். நான் இப்படிச் சொடக்குப் போட்டா என் காலடியில் எத்தனை பொண்ணுங்க வந்து விழுந்து கிடப்பாங்க தெரியுமா? ஆறு மாசத்துல உன்னை ‘டிரை’ பண்ணினேனா? நான் அப்படிப்பட்டவனா இருந்தா உன்னை வீழ்த்த எனக்கு ஆறு மாசம் தேவைப்பட்டிருக்காது. அப்ப பழகினபோது என் சுண்டு விரல் உன் மேல பட்டிருக்குமா? கழட்டிவிட கதை விடறேனாம். தான் பண்ணின துரோகத்தை மறைக்க என் மேல பழியா?”– கண்கள் சிவக்கச் சீறினான் குருராஜ்.

“துரோகம், துரோகம்னா எது துரோகம்?” அவளும் கர்ஜித்தாள்.

அவன் பதில் பேசும்முன்– இவர்கள் பேச்சு சப்தத்தில் விழித்துக்கொண்ட குழந்தை மெல்ல சிணுங்கியது. மணிக்கண்ணை உருட்டியது. அப்போது நேத்ராவும், அப்பாவும் தென்பட– பெரிய சிணுங்கலாய் மாறி– “நேத்ராம்மா” என்று அவளை நோக்கிக் கைகளை நீட்டியது.

தாவி குழந்தையை அணைத்துக்கொண்டு அதனை சமாதானம் செய்ய அவள் முற்பட, சற்றும் கோபம் குறையாமல் வேகமாய் வெளியேறினான் குருராஜ்.

## 12

**“ஓடி விளையாடு பாப்பா! நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா... நீ பயங்கொள்ளல ஆகாது பாப்பா...”**

தெளிவாய் நேத்ரா சொல்லச் சொல்ல, தன் செப்பு வாய் திறந்து மழலையில் திருப்பிச் சொன்னது மனோ. அது நிறுத்தும் இடைவெளிகளில் ஸ்பூனால் பழத்துண்டுகளை அதன் வாயில்



ஊட்டிவிட்டாள் நேத்ரா.

சாய்வு நாற்காலியில் அமர்ந்து பாரதி பாடலைப் பேத்தி சொல்லும் அழகை ரசித்துக்கொண்டிருந்தார் ஜானகியம்மா. மெல்ல அதன் வாயைத் துடைத்துவிட்டு, தன் தோளில் போட்டுக்கொண்டாள் திரிநேத்ரா.

இனிய குரலில், “காற்றினிலே வரும் கீதம்– கண்கள் பனித்திட பொங்கும் கீதம்! கல்லும் கனியும் கீதம்... காட்டு விலங்கும் கேட்டே மயங்கும் மதுர மோகன கீதம்...!” என்று பாடினாள்.

அவளது கழுத்தை இழுத்துக் கட்டிக்கொண்ட மனோ, கண்கள் மெல்ல சொக்க அப்படியே தூங்கிப் போனது. அதை படுக்கையில் கிடத்திவிட்டு– கீழே மதிய உணவை சாப்பிட வந்தாள் நேத்ரா.

அவளுக்காக ஜானகியம்மா காத்திருந்தார்.

“என்னம்மா, நீங்க இன்னும் சாப்பிடலையா?”

“நீ வரட்டுமேன்னு காத்திருந்தேன். எப்படியும் மனோவைத் தூங்க வெச்சுட்டு வரவேண்டியதுதானே! எப்பவும் குரு கூட சாப்பிட்டே பழக்கம். அவனும் இப்ப ஊர்ல இல்லையா... நீ இருக்கும்போது எதுக்கு தனியா சாப்பிடணும்?”

ஒரு கோடீஸ்வரி, தன் கீழ் சம்பளம் வாங்கும் ஊழியை ஒருத்தியை சமமாக பாவித்துப் பேசுகிறார்! எத்தனை பேருக்கு இந்த உயர்ந்த குணம் சாத்தியம்? ஏதோதோ பேசிக்கொண்டு இருவரும் சாப்பிட்டார்கள். கைகழுவி ‘ஹால்’ பக்கமாய் வந்தபோது, கட்டு தபால் உறைகளோடு அவளிடம் வந்தான் சேகர்.

“நேத்ராம்மா, இதுல ஆபீஸ் சம்பந்தப்பட்ட முக்கியமான கடிதம் எதுன்னு பிரிச்செடுங்க. வீட்டு லெட்டரைப் பிரிச்சுப் படிச்சு சொல்லுங்க. ஆபீஸ் லெட்டரை முனுசாமி வரும்போது கொடுத்து அனுப்பிடுவேன்” என்று அவள் முன் நீட்டினான்.

குருராஜின் தனி உதவியாளர், அவனுடைய அப்பா காலம் முதல் கம்பெனியில் இருப்பவர். வயது காரணமாய் உடல்நலம் குன்றி, இனி தொடர முடியாது என்ற கட்டத்தில் வேலையை விட்டிருக்கிறார். அவர் இடத்திற்கு பொறுத்தமான நபர் இன்னும் தேர்வாகவில்லை. அதற்குள், வியாபார நிமித்தமாய் குருராஜ் டெல்லி செல்ல வேண்டியது வந்துவிட்டது.

“ஒரு வாரம்தானே சேகர், ஆபீஸ்ல சமாளிச்சுப்பாங்க. வீட்ல ஏதாவது தேவைன்னா நேத்ராவைக் கேட்டுக்கோங்க” என்று அவனே சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அதனால், இரு தினங்களாய் முக்கிய கடிதங்களைப் பார்ப்பது- மின்னஞ்சல் அனுப்புவது, வங்கி விஷயங்களில் தேவையெனில் சேகருக்கு உதவுவது என்று சின்னச் சின்ன வேலைகளை திரிநேத்ரா கவனித்துக்கொண்டாள்.

அன்றும் அப்படித்தான் அசுவாரசியமாய் தபால்களைப் பிரித்துக்கொண்டிருந்தவள், திடீரென வக்கீலிடம் இருந்து குருராஜ் பெயருக்கு வந்திருந்த கடிதம் கண்டு திடுக்கிட்டாள்.

“வக்கீல்கிட்ட இருந்து எதுக்கு இவர் பேருக்கு கடிதம்- அதுவும் வீட்டு முகவரிக்கு?” என்றபடி சேகரைப் பார்த்தாள்.

சேகர் சட்டென ஜானகியம்மாவை நோக்க, அவரும் அதிர்ச்சியை மறைக்க தலை குனிந்துகொண்டார். திரிநேத்ரா இதையெல்லாம் கவனிக்காமல் பரபரவென கடிதத்தைக் கிழித்தாள். வாக்கியங்களைப் படித்து அர்த்தம் விளங்க விளங்க அப்படியே உரைந்து போனாள்.

“அ...அம்மா” என்று ஜானகியம்மா அருகே போய் அவர் காலடியில் தடாலென சரிந்தபடி உட்கார்ந்தவள்,

“இ... இது என்ன தெரியுமா...? அ...அவரோட... அவருக்கு...” பதற்றத்தில் சரியாகப் பேசக்கூட முடியவில்லை அவளால்.

“குருராஜீக்கும், அவன் மனைவிக்கும் விவாகரத்து ஆகிடுச்சுன்னு வந்திருக்கும்- அதானே நேத்ரா?”



நிதானமாய் ஜானகியம்மா சொல்ல, நிலைகுலைந்து போனாள் நேத்ரா.

“ஆ... அப்படின்னா மனோவோட அம்மா சாகலையா?”

தலையாட்டி மறுத்தார் ஜானகியம்மா.

“எ... என்னம்மா சொல்றீங்க? பூ மாதிரி பெண் குழந்தையை விட்டுட்டு புருஷனைப் பிரிஞ்சு போக எப்படிம்மா ஒரு பொண்ணுக்கு... உங்களைப் பார்த்தா தாயையும், பிள்ளையையும் பிரிக்கிறவங்களாத் தோணலை. சார் அப்படிப்பட்டவரில்லை. அப்ப...”

“அவதாம்மா என் மகனைப் பிரிஞ்சு போனா. சும்மா இல்லை... எவனோடவோ...” பேச முடியாமல் கண்களில் நீர் திரையிட- உதடு துடிக்க கலங்கினார் ஜானகியம்மா.

நேத்ராவால் எதுவுமே பேச முடியவில்லை. ‘எவனோடோ...’ என்று அந்தம்மாள் முடிக்காமல் விட்ட வார்த்தை ஆயிரம் அர்த்தங்களை வெளியிட்டன. தன்னை துரோகி என்றவனுக்கு கடவுள் ஏதோ ஒரு விதத்தில் பாடம் புகட்டி இருக்கிறார். ஆனால், அவளால் இதற்கு ஆனந்தப்பட முடியவில்லையே!

கண்களைத் துடைத்துக்கொண்ட ஜானகியம்மா தொடர்ந்தார். “இத்தனைக்கும் அவ என் சொந்த தம்பி மக...”- நிமிர்ந்து இவளைப் பார்த்தவர், இவள் முகபாவத்தை வைத்து என்ன யூகித்தாரோ, மெல்ல அவளை எழுப்பி தன் அருகே அமர்த்திக்கொண்டார்.

“உனக்கும், எனக்கும் என்ன பந்தம்னு தெரியலைம்மா, நேத்ரா. ஆனாலும், வந்த கொஞ்ச நாட்களிலேயே உன் அன்பாலும், பண்பாலும் என்னைக் கட்டிப் போட்டுட்டே. எனக்கும் விஷயத்தை யார்கிட்டயாவது சொன்னாத் தேவலைன்னு தோணுது. எத்தனை நாட்கள்தான் மனசுலயே போட்டு வச்சு குமையறது சொல்லு.”

“உங்க மனப்பாரம் குறையும்னா, சொல்லுங்கம்மா”- உண்மையான அக்கறையுடன் கேட்டாள். இதுவரை தன்னுடைய

ராஜ் தன் மனைவியுடன் சந்தோஷமாக வாழ்ந்து அவளை இழந்துவிட்டான் என்றுதான் நினைத்திருந்தாள். ஆனால், இப்போது ஜானகியம்மா வேறு ஏதோ பெரிய பாரத்தை இறக்கிவைக்கப் போகிறார் என்று தோன்றியது.

ஜானகியம்மாள் தொடங்கும் முன் தொலைபேசி அழைத்தது. நேத்ரா எடுத்தாள்.

"நேத்ராவா? நான்தான் அம்மா பேசறேன்டா."

அம்மாவின் குரல் கேட்ட உடனேயே இவளுக்கு மனம் நெகிழ்ந்தது.

"அம்மா! நல்லா இருக்கியாம்மா?"

அம்மாவின் அறுவை சிகிச்சை முடிந்த கையோடு, நறுக்கென 'அம்மா... அம்மான்னு அவங்களைப் பார்க்க ஓடக்கூடாது. குழந்தையைக் கவனிக்கறதுதான் முக்கிய வேலை' எனும் விதமாய் குருராஜ் பேசியது முதல் குழந்தையைவிட்டு விலகாமலேதான் இருக்கிறாள்.

அம்மாவை மருத்துவமனையில் இருந்து முதியோர் இல்லத்திற்கு மாற்றிய தினம்கூட அவள் போகவில்லை. குழந்தை கீழே விழுந்து அடிபட்ட வேகத்தில் அன்று அவன் அப்படி பேசி இருக்கலாம். ஆனால், முதலாளி– தொழிலாளி உறவையும் மீறி அவர்களுள் நடக்கும் பனிப்போரும், அதனால் அவன் வீசும் சுடு சொற்களும் அவளுக்குத் தாங்க முடியாத வலியைத் தந்தன. அம்மாவின் வைத்திய செலவை அவன் ஏற்றிருந்ததால் அவனுக்குக் கடன்பட்டிருக்கிறாளே! காதல், காதல் தோல்வி, பனிப்போர், செஞ்சோற்றுக் கடன் என்று அவனுடனான பன்முனைத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கப் போராடிக்கொண்டு இருக்கிறாள்.

இந்தப் போராட்டத்தில் அவள் முதல் பலி கொடுத்தது அம்மாவை, அவள் அருகே இருந்து காட்டியிருக்க வேண்டிய அன்பை. அம்மாவுடன் இப்போது பேசும்போதும் அந்தச் சின்ன

குற்ற உணர்வு அவள் குரலில் வெளிப்படத்தான் செய்தது. அம்மாவின் அறுவை சிகிச்சை நாட்களில் அவன் தன்னிடம் எவ்வளவு கெடுபிடி காட்டிவிட்டான்? ஆனால், அம்மா தெம்பாகவே பேசினார்.

“நான் ரொம்ப நல்லா இருக்கேன்டாம்மா. நீ எப்படி இருக்கே?”

“நானும் நல்லாவே இருக்கேன்ம்மா. உன்னைத்தான் பக்கத்துல இருந்து கவனிச்சுக்கவே முடியலைம்மா.”

“ச்சி, அசடு. உனக்கு வேலை இல்லையா? லட்சக்கணக்குல உன் முதலாளி வீட்ல நமக்காக செலவு செஞ்சிருக்காங்க... அந்தத் தம்பி உண்மையிலேயே ரொம்ப நல்லவரும்மா. நான் ஆஸ்பத்திரியில் ஐ.சி.யூ.வுல இருந்து ‘வார்டு’க்கு வந்திருந்த பத்து நாளும் தவறாம வந்து பார்த்துட்டுப் போனாரு. டாக்டர்கிட்ட பேசினாரு. இப்பக்கூட டெல்லி போய் இருக்காறாமே. அதுக்கு முன்னாடி வந்து, விடுதியில சவுகரியம் எல்லாம் நல்லா இருக்கான்னு கேட்டுட்டுத்தான் போனார்...”

அம்மா பேசப் பேச அவள் அதிசயத்தில் சிலையானாள். இரக்கமற்றவன் போல் தன்னிடம் அவன் காட்டிய கெடுபிடி என்ன, அம்மாவை ஓடி ஓடி கவனித்திருக்கும் பாங்கென்ன! கெடுபிடி அவன் பொய் முகமூடியா? தன்னை மட்டும் அப்படிக் கடித்துக் குதற– தான் செய்த தவறென்ன?

அவள் எண்ண ஓட்டம் அறியாமல் அம்மா தொடர்ந்து பேசினார். “இப்படிப்பட்டவங்களுக்கு நாம செருப்பா தேகத்தை மாத்தி உழைச்சாலும் போறாதும்மா. நீ நல்லபடி அங்கே குழந்தையைக் கவனி. நான் நல்லா இருக்கேன். கவலையே படாதே. சரியா?”

“சரிம்மா. உடம்பை நல்லா பார்த்துக்க...”

அம்மா தொடர்பை துண்டிக்க, யோசனையாய் வந்து ஜானகியம்மா அருகே அமர்ந்தாள் நேத்ரா.



“என்ன நேத்ரா? அம்மாவே போன்ல பேசினாங்களா? நல்லா இருக்காங்களாமா?”

“ரொம்ப நல்லா இருக்காங்கம்மா. எல்லாம் உங்க தயவுதான்...”

“என்ன தயவு? நாம எல்லோரும் ஆண்டவன் தயவுல இருக்கோம். ஏதோ வாழ்ந்தோம் செத்தோம்னு இருந்துட்டுப் போகவா கடவுள் நம்மைப் படைச்சிருக்கான்? அப்படி வாழ்ந்தா... மிருகத்துக்கும், நமக்கும் என்ன வித்தியாசம்? செத்த பிறகும் நாம செஞ்ச நல்லது காரணமா நாலு பேர் மனசுல நிறைஞ்சு வாழ்ந்தா அதுதான் பிறவிப் பயன்ம்மா?

“இவ்வளவு நல்லவங்களான உங்களுக்கு எப்படிம்மா அப்படியொரு... மருமக அமைஞ்சாங்க?”– தன்னை மீறி கேட்டுவிட்டாள்.

ஒரு நொடி அப்படியே முகம் வாடிப் போனது ஜானகியம்மாவுக்கு. அந்த மலர்ந்த முகம் கூம்பியதில் நேத்ராவே சங்கடப்பட்டுப் போனாள். முதன் முதலில் இவரைப் பார்த்தபோது இவருக்கு என்ன கவலை இருக்கப் போகிறது என்றுதானே தனக்குத் தோன்றியது. அந்தப் புன்னகை முகத்தின் பின்னும் சோக முள் இருக்கிறதா?

“என்ன சொல்றதும்மா? விதின்னுதான் சொல்லணும். நல்ல பெண்தான் இந்த வீட்டுக்கு மருமகளா வந்திருக்கணும். ஒரு குலவிளக்கைத்தான் என் மகன் விரும்பறான்னு தெரிஞ்சப்போ ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஆனா, ஏனோ விதி செஞ்ச சதி. என் மகன் காதல் முறிஞ்சுப் போச்சு...”

நேத்ரா எச்சில் விழுங்கினாள்.

“என் மகன் கல்யாணம் ஒரு கட்டாயக் கல்யாணம்னுதான் சொல்லணும். என் கணவர் மரணப் படுக்கையில்... காதல் தோல்வி, உங்க கட்டாயத்தாலன்னு குரு துடிச்சான். வேற வழி இல்லை. சாகக் கிடக்கும் அப்பா ஆசையை நிறைவேத்த

இவ கழுத்துல தாலி கட்டினான். அவனால காதலியை மறக்க முடியலை. கிரிஜா அதான் என் மருமக– ரொம்ப செல்லமா வளர்க்கப்பட்ட பொண்ணு. திமிரும், துடுக்கும் அதிகம். அவதான் ஒத்தைக் கால்ல நின்னு குருவைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டா.

ஆனா, அவனது காதல் தோல்வி காயம் ஆற அவகாசம் கொடுக்கற பொறுமைகூட அவகிட்ட இல்லை. சதா அவனோடு சண்டை. குருவுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. அந்த நேரம்தான் என் கணவரும் காலமானார். குருவை அன்பால வளைக்கத் தெரியாம வாழ்வை இன்னும் சிக்கலாக்கிட்டா கிரிஜா. அவ கூடவே அவன் இருக்கணும், அவளைப் புகழணும், பரிசுகளை வாங்கிக் குவிக்கணும்– இதெல்லாம் அவளோட கனவு. மனசு ஒட்டாட்டாலும் கட்டிக்கிட்ட கடமைக்காக அவனும் ஓரளவு அனுசரிக்கப் பார்த்தான். ஆனா, அவளோட ஆளுமைக்குணம் அதிகரிக்க அதிகரிக்க குரு ரொம்ப அவஸ்தைப்பட்டான். அஞ்சு மணிக்கு வந்து சினிமாவுக்கு கூட்டிப் போகணும்னு சொல்லிட்டா... அவன் சரியா வந்துடணும். எங்காவது வேலை காரணமா நேரத்துக்கு கூட்டிட்டுப் போக முடியாட்டா, அவன் தொலைஞ்சான். இந்தப் போக்கு காரணமா, குரு ரொம்ப விலகத் தொடங்கினான். அலுவலகமே கதின்னு பல நாட்கள் பழி கிடந்தான். இந்த வேளையில்தான் இந்தப் பூக்குட்டி பிறந்தா..."

பேத்தியைப் பற்றிச் சொல்லும்போதே கண்கள் மின்ன– முகம் மீண்டும் மலர்ந்தது, ஜானகியம்மாவுக்கு.

"மனோ பிறந்த பிறகாவது தம்பதிக்கிடையே அன்னியோன்னியம் ஏற்படும்னு நினைச்சேன். அதுக்கு ஏத்த மாதிரி குழந்தைகிட்ட குரு ரொம்ப ஆசையா இருந்தான். குழந்தைக்காக மனைவி கூட சண்டை போடறதைக் கூட நிறுத்திட்டு, அவ இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைஞ்சு சமாதானமா போகப் பார்த்தான். ஆனா, அவளுக்கு அதெல்லாம் போதலை. குழந்தையைவிட தன்கிட்ட காட்டும் அன்பு குறைச்சல்னு சண்டை போட்டா.

தொட்டதுக்கெல்லாம் குத்தம். அப்பதான் அவ கூட படிச்ச



பையன் ஒருத்தன் ஊட்டியில் ஏதோ வேலைன்னு வந்தான். அடிக்கடி இவளைப் பார்க்க வருவான். இவளும் அவனோடு ஊர் சுத்தக் கிளம்பிடுவா. இது சரியில்லைன்னு நாசூக்கா நான் கண்டிச்சேன்... கேட்கலை. குருவைப் பத்தி அவன்கிட்ட இவ என்ன புகார் சொன்னாளோ, அவன் என்ன சொன்னானோ... பாவி மக, அவன் வேலை முடிஞ்சு மும்பை போகும்போது, இவளும் அவனோட ஓடிட்டா..."

சொல்லும்போதே குரல் கம்மி, கண்கள் பனித்துவிட்டன ஜானகியம்மாவுக்கு. திரிநேத்ராவோ அப்படியே உறைந்துபோய் அமர்ந்துவிட்டாள். பெண்கள் என்றாலே அவன் மனதில் ஏன் வெறுப்பு என்பது மெல்ல விளங்கியது.

தன்னைச் சுதாரித்துக்கொண்ட ஜானகியம்மா, "நேத்ரா, உன்னையும் எங்க வீட்டு கதையைச் சொல்லி கலங்க வச்சுட்டேன், பார். விடு, எல்லாம் முடிஞ்சு போன கதை... அவ இருப்பிடம் தெரியலை– என் தம்பி விலாசத்துக்கு 'நோட்டீஸ்' கொடுத்து, இப்ப விவாகரத்தும் வாங்கியாச்சு. இனி குருவோட வாழ்க்கையில் புது அத்தியாயம்தான் தொடங்கணும். கடவுள்தான் அதுக்குக் கண் திறக்கணும்... நீ வந்ததில் இருந்து உன் பேச்சும், பாட்டும், உற்சாகமும் எனக்கும்... குருவுக்கும் நல்ல மாறுதல். எப்பவும்... நீ சோக முகமே காட்டக்கூடாது."

நேத்ரா அந்த அபூர்வ மனுஷியை ஆச்சரியமாய்ப் பார்த்தாள். மெல்ல சிரித்தபடி–

"உங்களை மாதிரி ஒரு அம்மா இருக்கும்போது, உங்க மகன் வாழ்வு தோற்றுப் போகுமாம்மா?" என்றாள் மென்மையாய்.

பெருமூச்சு விட்ட ஜானகியம்மா விரக்தியாய் சொன்னார், "என்னம்மா செய்ய, அவன் காதலும் தோற்று... கல்யாணமும் தோற்றுடுச்சே..."

"தப்பா நினைக்காட்டி, சொல்லுங்கம்மா. அவர் காதலை நீங்க எதிர்க்கலை. பின் ஏன் தோற்றது?"

"அது... அந்தப் பொண்ணு யார் என்னன்னு அவன் முழுசா என்கிட்ட சொல்லலை. வசதி இல்லை. ஆனா, நல்ல குடும்பப் பொண்ணுன்னு சொன்னான். அவன் அலுவலகப் பொறுப்பை ஏற்ற பிறகு, கல்யாணம் செஞ்சுடலாம்னுதான் இருந்தேன். ஆனா, அதுக்குள்ள என் கணவர் உடல்நலம் இல்லாம படுத்தார்... அப்போ என் அக்கா வீட்டுக்காரர்கிட்ட இருந்து அந்தப் பொண்ணைப் பத்தி அவளுக்கு வேற ஒரு பையனோட தொடர்புன்னு தவறான செய்தி வந்தது.

குரு முதல்ல நம்பலை. அப்பத்தான் அந்தப் பொண்ணுக்கு கோவில்ல வெச்சு யாரோ பையன் பிரசாதத்தை வாயில ஊட்டுற மாதிரி ஒரு 'போட்டோ'வை அவன் நண்பனே அனுப்பி வெச்சானாம். பெரியப்பா சொன்னது சரிதான்னு புரிஞ்சு துடிச்சுப் போயிட்டான்..."

"ஐயோ, எனக்கு அப்படி எந்தத் தவறான தொடர்பும் கிடையாது. கோவில்ல கோலம் போட்ட கையால பிரசாதத்தை வாயில் போட முடியாதபோது, எனக்கு வாயில் போட்டது என் அண்ணன் முறையான என் சொந்த சித்தப்பா பையன் சரவணன்"– கண்களில் கண்ணீர் வழிய தன்னை மறந்து திரிநேத்ரா கூவி விட, ஜானகியம்மா அவளை ஆழமாய்ப் பார்த்தார்.

## 13

டெல்லியில் குழந்தைக்கு வேண்டியதை பார்த்துப் பார்த்து வாங்கினான் குருராஜ். ஒரு அழகான இளம் சிவப்பு நிற சுரிதாரைப் பார்த்தவுடன் நேத்ரா நினைவு வந்தது. வாங்கிப் போகலாமா... வேண்டாமா? வாங்கிப் போவது முறையா என்றெல்லாம் அவன் குழம்பி நின்றபோதுதான் அவன் நண்பன் ரகு வந்து அவனது தோள் தொட்டான்.



"ஹேய் ரகு, வாடா வா."

"என்ன... 'ஷாப்பிங்' எல்லாம் முடிஞ்சுதா?"

"ஓரளவுக்கு..."

"ஓட்டல்ல டேபிள் 'புக்' பண்ணிட்டேன். இன்னும் நேரம் இருக்கு. 'ஷாப்பிங்'கை முடி."

"என்னடா முக்கியமாப் பேசணும்னு சொன்னே?"

"நிதானமா உட்கார்ந்து பேசலாம்டா. நீ பொருட்கள் எல்லாம் வாங்கியாச்சா?"

"..................."

இவன் எதற்கும் இருக்கட்டும் என்று அந்த சுரிதாரை வாங்கிக்கொண்டான். அதை கவனித்தாலும், ரகு யாருக்கு என்று கேட்கவில்லை. இருவரும் காரில் ஏறி ஓட்டலுக்கு வந்தார்கள். அவர்களுக்கென முன்பதிவு செய்த இடங்களில் அமர்ந்தார்கள்.

குருராஜின் பள்ளிக்கால நாட்களில் இருந்தே ரகு தோழன். அவன் அப்பாவுக்கு அடிக்கடி மாற்றலாகும் வேலை. குருராஜ் எம்.பி.ஏ. 'புராஜெக்ட்' செய்வதற்காக சென்னையில் இருந்தபோது, இவனும் சென்னையில் எம்.இ. படித்துக்கொண்டிருந்தான். இப்போது ராணுவத்தின் கட்டுமானப் பணியில் அதிகாரியாக டெல்லி வாசம்.

தண்ணீரைப் பருகிய குருராஜ்– நண்பனை ஆர்வமாய்ப் பார்த்தபடி, "என்னடா முக்கிய விஷயம்? காலையில நீ போன் செஞ்சதில் இருந்தே எனக்கு எதுவுமே ஓடலை. ஒரே 'சஸ்பென்ஸ்'."

நண்பனை ஆழமாய்ப் பார்த்தான் ரகு.

"எப்படி ஆரம்பிக்கறதுன்னு தெரியலைடா? குரு... நீ எப்படி எடுத்துப்பேனும்..."

"போதும்டா பீடிகை. விஷயத்தைச் சொல்லு."

"நேத்ரா விஷயத்துல நாம அவசரப்பட்டுட்டோம்."

கண்களை சுருக்கி ரகுவை ஆழமாய்ப் பார்த்தான், குருராஜ்.

"என்ன சொல்றே?"

"நீ நேத்ராவை கல்யாணம் செஞ்சுக்கறதுல உன் பெரியப்பாவுக்கு இஷ்டமில்லை..."

"அதான் தெரிஞ்ச விஷயமாச்சே."

"அந்த நேரத்துலதான் உன் மாமா மக கிரிஜா உன் பெரியம்மா வீட்டுக்கு வந்தது. உன் மேல அவளுக்கு ஒரு ஈர்ப்பு இருக்கறதை புரிஞ்சுகிட்டு, உன் பெரியப்பா தூபம் போட்டிருக்கார்."

"ச்சு, இந்த கசப்பான 'பிளாஷ்பேக்' எதுக்குடா?"

"இரு, சொல்றேன். சரவணன் அப்போதான் உன் நேத்ரா வாழ்வில் குறுக்கிடறான். ரெண்டு பேரும் ஒண்ணா பல இடங்களுக்கு போய் வர, உன் பெரியப்பா கண்ல பட்டு- கண், காது, மூக்கு வச்சு உனக்கும் தெரிவிச்சுட்டார். ஆனா, நீ நம்பலை..."

இடையில் சூப் வர- சற்று பேச்சை நிறுத்தியவன், மீண்டும் தொடர்ந்தான்.

"அப்போதான் எனக்கு ஒரு 'கான்டக்ட் சர்டிபிகேட்' தேவைப்பட- உன் பெரியப்பாவைப் போய்ப் பார்த்தேன். அவர் 'செல்போன்'ல யாரோ பையன் நேத்ரா வாய்ல எதையோ ஊட்டற மாதிரி ஒரு 'போட்டோ'வைக் காட்டினார். 'நேத்ரா நடத்தை சரியில்லை. குரு சொன்னா கேட்க மாட்டேங்கறான். இந்தப் படத்தை பார்த்த பின்பும் நம்பாம இருக்க முடியுமா சொல்லு?'ன்னு சொன்னவர், அந்தப் படத்தை என் 'செல்' மூலமா உனக்கு அனுப்பினா நீ நம்புவேன்னு சொன்னார். உனக்கு நல்லது செய்யறதா நினைச்சுக்கிட்டு நானும் அதை



அனுப்பிட்டேன்... அது உண்மையா, இல்லையான்னு உறுதி செஞ்சுக்க நேரமில்லாம வேலையில் சேர வேண்டிய சூழல்..."

பேச்சை நிறுத்திவிட்டு சூப்பை இரண்டு வாய் பருகினான் ரகு. குருராஜ் அப்படியே கரண்டியால் சூப்பைக் கிளறிக்கொண்டிருந்தான். தன் இதய தேவதை ராட்சஷியாய் மாறிய கறுப்பு தினங்களை நினைவுபடுத்தவா ரகு இவ்வளவு தூரம் கூட்டி வந்தான்?

"ஏனோ தெரியலைடா, ஆனா அவ அந்த சரவணனையும் கல்யாணம் செஞ்சுக்கலை" என்றான் கசப்பாக.

கரண்டியை சூப்பில் போட்ட ரகு பளிச்செனக் கேட்டான்- "எப்படிடா செஞ்சுப்பா? அண்ணன் முறையான சித்தப்பா மகனை கட்டிப்பாளா?"

"என்னடா சொல்றே?" முன்னால் நகர்ந்து நண்பன் அதிர்ந்து கேட்ட வேகத்தில் கிண்ணம் ஆடி- சூப் கொஞ்சம் சிந்தியது. ரகுவே கொஞ்சம் ஆடிப் போனான்.

"கூல்டா கூல். எனக்கே இந்த உண்மை நேத்துதான் தெரியும். எனக்குக் கீழே புதுசா சேர்ந்த உதவியாளர்கள் ரெண்டு பேர்ல இந்த சரவணன் ஒருத்தன். நேத்து வேலையில சேர்ந்தவனை எங்கேயோ பார்த்திருக்கோமேன்னு மண்டையைப் போட்டு உடைச்சுக்கிட்டேன். தமிழன் என்பதால் கூடுதல் ஈர்ப்பு. பேச்சுக் கொடுத்தேன். கிட்டத்தட்ட அநாதையான அவனுக்கு பெரியம்மாவும், அவங்க மக நேத்ராவும்தான் உறவுமுறை. நல்லா சம்பாதிச்சு தங்கைக்கு கல்யாணம் செய்து வைக்கிறது மட்டும்தான் இப்போதைய கனவுன்னு சொன்னான்.

அப்போதான் உறைச்சது. நம்ம நேத்ராவைப் பத்தித்தான் சொல்றானான்னு உறுதி செஞ்சுக்கிட்டேன். நீ டெல்லி வரப் போறதா அப்பத்தான் 'போன்' செஞ்சே. இதோ உண்மையையெல்லாம் சொல்லிட்டேன்"- சொல்லி முடித்த

திருப்தியில் ரகு சிரிக்க, பாரம் ஏறிய மனதுடன் அப்படியே தலையில் கைவைத்து சாய்ந்துவிட்டான் குருராஜ்.

## 14

“அப்பா வர நேரமாகுமா?”

“இதோ இப்ப வந்துடுவார்.”

பலமுறை கேட்டு அலுத்த குழந்தை, அப்படியே சோபாவில் சாய்ந்தது.

சென்னை வந்தவன் அங்கிருந்து விமானத்தில் கோவை போய்– சின்ன வேலை ஒன்றை முடித்துக்கொண்டு குன்னூர் வருவதாய் தெரிவித்திருந்தான். குழந்தை, பாவம் எத்தனை நேரம் முழித்துக்கொண்டிருக்கும்? தூங்கியேவிட்டது.

குழந்தையை அதன் அறையில் கொண்டுபோய்விட்ட நேத்ரா, அப்படியே விளக்கை அணைத்துவிட்டு தானும் படுத்துவிட்டாள். குருராஜை தவிர்க்கவே விரும்பினாள். எப்படியும் குழந்தையைப் பார்க்க வரத்தான் போகிறான். எப்படி தவிர்க்க முடியும்? தூங்கிவிட்டால் எழுப்பவா போகிறான்? ஆனால், பாழாய்ப்போன தூக்கம் வர மறுத்தது. அவன் வருவதற்குள் தூங்கிவிட வேண்டும் என்ற எண்ணமே தூக்கத்தை விரட்டியது.

மனம் கலவையான உணர்வுகளில் குழம்பியது. அவன் பெரியப்பா எது வேண்டுமானாலும் பேசட்டும். குருராஜ்– தன்ராஜ் அதை அப்படியே நம்பிவிடுவதா? இரண்டு நாட்களாய் அவளால் ஜீரணிக்க முடியாமல் குடைந்த கேள்விக்கு விடைதான் இல்லை.

‘உன்னை தவறா நினைச்ச பாவத்துக்குத்தான் கிரிஜா மூலம் தண்டனை அனுபவிச்சுட்டான்ம்மா என் மகன்’ என்று அன்று



முத்தாய்ப்பாய் சொல்லி எழுந்துபோன ஜானகியம்மா கண்களும் பனித்துத்தான் இருந்தன.

என்ன அழுது என்ன? யார் வருந்தி என்ன? சொர்க்கமாய் அமைந்திருக்க வேண்டிய வாழ்வை ஒரு சின்ன சந்தேகப் பொறி நாசம் செய்துவிட்டது மட்டுமே அல்லவா உண்மை!

எண்ணத்தோடு போராடிக்கொண்டிருந்தவளை அவன் காலடிச் சப்தம் வாறிச் சுருட்டி எழ வைத்தது. தூங்குவதாய் பாசாங்காவது செய்ய நினைத்தவள், அதற்கு மாறாய் அவன் வெளியே வரும்போதே எழுந்து விளக்கைப் போட்டுவிட்டாள். தன்னைத்தானே நொந்தபடி– அவனை நேருக்கு நேர் பார்க்க விரும்பாமல்– ஜன்னல் நோக்கி நின்றாள். திறந்திருந்த கதவு என்றாலும், நாசூக்காய் தட்டிவிட்டே உள்ளே வந்தான்.

குழந்தையைத்தானே அவன் கொஞ்சப் போகிறான் என்ற எண்ணத்தில் திரும்பாமல் நின்றாள்.

“என்னை ஏன் தவறாக நினைத்தாய்?’ என்று அவன் சட்டையைப் பற்றிக் குலுக்க நினைத்த எண்ணத்தை அப்படியே கட்டுப்படுத்தினாள். தான் நிரபராதி என்ற உண்மையை தன் வாயால் சொல்லப் போவதில்லை– சொல்லத் தேவையில்லை என்றே முடிவு எடுத்திருந்தாள்.

அவன் நேராக அவளிடம் வந்தான்.

“நேத்ரா”– செடிக்கு வலிக்காமல் பூவைப் பறிக்கும் மென்மையுடன் அழைத்தான். அவள் திரும்பினாள். அவனைப் பார்ப்பதை மட்டும் தவிர்த்தபடி நின்றாள். அவனது கையில் அவள் பெயரிட்ட ஒரு கடித உறை. அவள் புரியாமல் அதை பெற்றுக்கொண்டபடி விழிகளை நிமிர்த்தினாள். ‘என்ன?’ என் அவள் பார்வையைப் புரிந்துகொண்டவனாய் தயங்கியப பேச்சைத் தொடங்கினான்.

“ஊட்டியில் இருக்கும் பள்ளிக்கூடத்தில் இதைவிட கூடு சம்பளத்தில் உங்களுக்கு வேலைக்கான உத்தரவு இது.”

அவள் புரியாமல் அவனை நோக்கியபடி, "அ...அப்படின்னா... இங்கே எனக்கு வேலை இல்லைன்னு அர்த்தமா? ஏன்? என் வேலையை நான் ஒழுங்காகத்தானே செஞ்சுக்கிட்டு வரேன்."

"நீ... சாரி, நீங்க எப்பவுமே சரியாத்தான்– ஒழுங்காத்தான் இருந்துகிட்டிருக்கீங்க. நான் தப்பு செஞ்சுட்டேன். ஒரே ஒரு கேள்வி, 'யார் அந்த சரவணன்?'னு கேட்டிருக்கணும். கேட்காததற்கு அஞ்சு வருஷம் தண்டனை அனுபவிச்சுட்டேன். சீதையைப் பத்தித் தெரிஞ்சிருந்தும் தீக்குளிக்க வெச்சார் ராமன். ராமனை சீதை தீக்குளிக்கச் சொல்லலை. தன்னை சந்தேகப்பட்டதையும் மன்னிச்சு ராமனோடு வாழ்ந்தாங்க. பெண்கள் எப்பவுமே பெருந்தன்மையில் சிறந்துடறாங்க. ஆண்கள் சந்தேகப்பட்டே கெட்டுப் போயிடறோம்."

அவன் ஆழ்மனதில் இருந்து உண்மையாய்ப் பேசினான். அவள் கண்கள் நிறைந்தன.

'எந்த முகத்தை வச்சுக்கிட்டு– 'எல்லாத்தையும் மறந்துட்டு என்னைக் கல்யாணம் செஞ்சுக்கோ'ன்னு கேட்பேன். உன்னைப் பார்க்கும் போதெல்லாம் என் மனசாட்சி என்னைக் கொல்லும்'- அவன் சொல்ல நினைத்தும் வார்த்தைகள் தொண்டையிலே சிக்கின.

'தவறு செய்யறவன் மனுஷன். அதை உணர்ந்து திருந்தறவன் தேவன். நீங்களே சொன்ன மாதிரி என்னை சந்தேகப்பட்டதற்கு அஞ்சு வருஷமா கஷ்டப்பட்டாச்சு. நான் எதையும் மனசுல வச்சுக்கலை. ஆனா, அந்தஸ்துங்கற பள்ளம் தாண்டி உங்ககிட்ட நெருங்க முடியாத அதள பாதாளத்துல நான் இருக்கேன்.'

– அவளும் மனதுக்குள் மருகினாள்.

"நாளைக் காலையில் நீங்க போய் சேர்ந்துக்கலாம்."

"இங்க... குழந்தை...?"

"வேற ஏற்பாடு செஞ்சுக்கறேன்."





ஒரு நொடி தயங்கி நின்றான். இருவர் மனத்திலும் பேச ஆயிரம் விஷயங்கள் இருந்தும், இருவரும் ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. அவன் திரும்பி விறுவிறுவென வெளியேறினான்.

## 15

ஹாலில் அவள் பெட்டிகள் தயாராய் இருந்தன. ‘டிபன்’ சாப்பிட்டுவிட்டு கைகழுவி வந்தாள் நேத்ரா. பள்ளிக்கூடம் போகத் தயாராய் இருந்தது குழந்தை.

“நேத்ராம்மா, நீங்க வரலையா?” என்றது மழலையில்.

“இல்லடா. சொன்னேனே... நான் ஊருக்குப் போயிட்டு வந்துடுவேன்னு.”

“எப்ப வருவ?”

“ம்... வந்துடுவேன், சீக்கிரமா. நீ கிளம்பு.”

அது அடுத்த கேள்வியை வீசும் முன் நகர்ந்துவிட நினைத்து, சட்டென சாமி அறையில் இருக்கும் ஜானகியம்மாவைப் பார்க்கப் போனாள்.

“கிளம்பிட்டியாம்மா?” அந்த மூதாட்டியின் குரலில் ஏக வருத்தம்.

“ஆமாம்மா” அவளும் மென்மையாய் சொன்னாள்.

“அவனுக்கு சரவணன் யாருங்கற விஷயம் எப்படித் தெரிஞ்சதுன்னு தெரியலை. உண்மை தெரிஞ்சா ஒரு நல்ல முடிவுக்கு வருவான்னு நினைச்சேன். ஆனா, இப்படி... நீ போய்த்தான் ஆகணுமா?”

அவர் உள்ளம் பதைப்பது புரிந்தது.

“முதலாளி சொன்னா தொழிலாளி கேட்டுத்தானேம்மா

ஆகணும்."

இருவரும் வெளியே வந்தார்கள். மாடியில் இருந்து குருராஜ் இறங்கி வந்தான். டிரைவரை அழைத்து– அவளை எந்த இடத்தில் இறக்கிவிட வேண்டும் என்று சொன்னவன்– இவளிடம் திரும்பி, "நீங்க தயாரா?" என்றான்.

"ம்... இதோ பெட்டி எல்லாம்கூட ரெடி"– அவள் சன்னக்குரலில் சொன்னாள்.

எல்லோர் பார்வையும் அந்தப் பெட்டிகள் பக்கம் திரும்ப, அப்போதுதான் கவனித்தார்கள். அந்தப் பெட்டிகள் அருகே சின்னதாய் மனோரஞ்சனியின் சாப்பாட்டு கூடையும், பையும் இருந்தன.

"இது எப்படி இங்கே வந்துச்சு?"

"நான்தான் கொண்டு வச்சேன்"– மனோ தன் இரண்டு 'கவுன்'களைக் கொண்டுவந்து பையில் திணித்துக்கொண்டது.

"என்னடா பண்ணறே, குட்டி?" ஜானகியம்மா ஆச்சரியமாய்க் கேட்டார்.

"நானும் நேத்ராம்மாகூட ஊருக்குப் போயிட்டு வரேன்."

மூவரும் அதிர்ந்து போனார்கள்.

"இல்ல...வந்து...நான்..."– நேத்ரா தடுமாறினாள்.

"பாட்டியை விட்டுட்டுப் போவியாடா, குட்டி?" ஜானகியம்மா கெஞ்சினார்.

"வந்துடுவேன், பாட்டி. ஜஸ்ட் டூ டேஸ்– இல்ல நேத்ராம்மா?" ஓடிப்போய் குழந்தை அவள் கால்களை இறுகக் கட்டிக்கொண்டது.

அவள் மெல்லக் குனிந்தாள். "இல்லடா, குட்டி. இப்ப நான் மட்டும் போயிட்டு வந்துடுவேனாம். அப்புறமா, விடுமுறையில எல்லோருமா போவோமாம், சரியா?"



"இல்ல, நீ பொய் சொல்ற. அம்மா விட்டுட்டுப் போயிட்டாங்க. அப்பா அப்பப்போ விட்டுட்டு ஊருக்குப் போயிடறாரு. நீயும் போனா அம்மா மாதிரி வரவேமாட்டே..."– குழந்தை 'ஓ' என அழத் தொடங்கியது.

திரிநேத்ரா வாறி அணைத்துக்கொண்டாள்.

ஜானகியம்மா பனித்த கண்களை துடைத்துக்கொண்டு தலை நிமிர்த்தினார். மகனையும், நேத்ராவும் பார்த்தார். பின், "குட்டிம்மா, நான் சொல்றேன், நேத்ராம்மா உன்னையும், என்னையும்– ஏன், அப்பாவையும் விட்டுட்டு எங்கேயும் போகமாட்டா. சேகர், நேத்ரா பெட்டியைக் கொண்டுபோய் மேலே வை."

அழுத்தமாகச் சொன்னார். குருராஜும், நேத்ராவும் புரியாமல் பார்த்தார்கள்.

குழந்தையை நேத்ராவிடம் இருந்து வாங்கிக்கொண்ட ஜானகியம்மா, "மனோ குட்டி, இனிமேல் இவங்க டீச்சரம்மா இல்லை. உன்னோட அம்மா" என்றார்.

குருராஜும், நேத்ராவும் ஒருவரையொருவர் புதிராக பார்த்துக்கொண்டார்கள்.

குழந்தையுடன் திரிநேத்ரா பக்கம் திரும்பிய ஜானகியம்மா, "உங்க அம்மாகிட்ட முறையா பேசறேன் நேத்ரா. அதுக்கு முன்னாடி உன் சம்மதம் முக்கியம். சொல்லும்மா, முழுமனசா என் மகனை ஏத்துப்பியா?"

சட்டென அவர் கைகளைப் பற்றிக்கொண்ட நேத்ரா "என்னம்மா இப்படிக் கேட்டுட்டீங்க? அவர் மேல கோபம் வருத்தமெல்லாம் இருந்தது. ஆனா, அவர் மனசு வருந் பேசினதுல– எல்லாமே பஞ்சாப் பறந்து போச்சு. ஆனா, இப்பவு சொல்றேன், உங்க அந்தஸ்து எங்கே... நான் எங்கே...?"

"அந்தஸ்து பார்த்து வந்தவ சந்தியில இல்லம்மா நிறுத்திட் போயிட்டா. உன் குணம் போதும்மா. கோடி ரூபாய் அது

ஈடாகுமா? என்கூட இத்தனை நாள் பழகின பிறகுமா என்கிட்ட இந்தக் கேள்வியை கேட்கற?"

"உங்க மகன்தான் என்னை இந்த வீட்டைவிட்டு போகச் சொன்னாரு"– ஓரக்கண்ணால் குருராஜைப் பார்த்தபடி சொன்னாள்.

காத்திருந்தவன் போல் பளீச்சென அவன்–

"என் மனசைவிட்டு அவ இன்னும் போகலைன்னு சொல்லும்மா?"

ஜானகியம்மா முகம் பூவாய் மலர்ந்தது.

"அப்புறமென்ன? உங்க அம்மாகிட்ட பேச நான் நாள் பார்க்கறேன்"– குழந்தையுடன் பரபரப்பாய் உள்ளே போனார் ஜானகியம்மா.

மெல்ல திரிநேத்ரா அருகே வந்த குருராஜ், "அம்மாவையும் மயக்கிட்டே போலிருக்கு" என்றான்

மெல்ல நிமிர்ந்தாள் திரிநேத்ரா.

இறுக்கமெல்லாம் காணாமல் போய்– சென்னையில் பார்த்த அதே குறும்பு கொப்பளிக்கும் இளம் பையனாய் குருராஜ் அவளுடைய ராஜ்! சட்டென கண்கள் பனித்தன.

அப்படியே தன் நெஞ்சோடு சேர்த்து அவளை அணைத்துக்கொண்டான் குருராஜ். மெல்லிய குரலில், "ஆள் மயக்கி" என்றான்.

இன்னும் இறுக்கமாய்... இணக்கமாய் அவனுள் புதைந்தாள், திரிநேத்ரா.

**(நிறைந்தது)**

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.